
உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
ஸ்ரீசம்பந்ததீர்த்தசரணாய நம:



ஆதிசைவப் பிரபாவம்





நூலாசிரியர்:
"வைதிக சைவ சித்தாந்த சண்ட மாருதம்"
சிவத்திரு. சூளை. ஸ்ரீசோமசுந்தரநாயகர் அவர்கள்

வெளியீடு:
ஆதிசைவர்கள் நலவாழ்வு மையம், கள்ளக்குறிச்சி

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீசம்பந்ததீர்த்தசரணாய நம:

ஆதிசைவப் பிரபாவம்

[சுமார் 140 ஆண்டுகளுக்கு பிறகு மறுபதிப்பு]

நூலாசிரியர் :

"வைதிகசைவ சித்தாந்த சண்ட மாருதம்"

சிவத்திரு. சூளை. ஸ்ரீ சோமசுந்தரநாயகர் அவர்கள்

திருமானூர்

சிவஸ்ரீ இராமநாத குருக்கள் - ஸ்ரீமதி குஞ்சம்மாள்

அவர்களின் பேரனும்,

கோமங்கலம்

சிவஸ்ரீ கைலாசநாத குருக்கள் - ஸ்ரீமதி செல்லம்மாள்

அவர்களின் மகன்

"ஜோதிஷ ரத்னா, ஸ்ரீ லலிதாம்பிகைதர்சன், சாக்தோபசனா",

"குருஜி"

சிவஸ்ரீ K.சந்திரசேகர சிவாசாரியார்-ஸ்ரீமதி மகாலெக்ஷ்மி

அவர்களின் நிதிஉதவியோடு, அவர்தம் மணிவிழாவில்

"ஆதிசைவப் பிரபாவம்"

என்ற இந்நூல் வெளியிடப்படுகின்றது.

வெளியீடு :

ஆதிசைவர்கள் நலவாழ்வு மையம்

கள்ளக்குறிச்சி - 606-202.

நூல் விபரங்கள்

நூல் பெயர் : ஆதிசைவப் பிரபாவம்

நூல் ஆசிரியர் : சூளை. சோமசுந்தரநாயகர்

நூலின் வகை : சைவ சமயம்

முதல் பதிப்பு : சுமார் 1880

மறு பதிப்பு : ஹேவிளம்பி வருடம், மார்கழ் 13-ம் நாள், (28-12-2017) வியாழக்கிழமை

நூலின் அளவு : 1/8 டெம்மி

பக்கங்கள் : 48

விலை : ரூ. **40/-**

தாள் : 13.7

எழுத்து : 12 புள்ளிகள்

படிகள் : 1000

வெளியீடும்,

கிடைக்குமிடங்களும் : தில்லை எஸ். கார்த்திகேயசிவம்
ஆதி சைவர்கள் நலவாழ்வு மையம்
குளத்துமேட்டுத்தெரு, (சத்தியா பிரஸ் அருகில்)
கள்ளக்குறிச்சி-606 202. போன்: 97518-48933

சிவஸ்ரீ K.சந்திரசேகர சிவாசாரியார்
ஸ்ரீ லலிதாம்பிகை பீடம், 720, மேல அக்ரஹாரம்,
முடிகொண்டான் P.O., நன்னிலம் தாலுகா,
திருவாரூர் மாவட்டம். போன் : 90952 47933

பொருளடக்கம்

அச்சாக்கம் : ஆர்.ஜி.பிரிண்டர்ஸ்
சின்னக்கடைத்தெரு, திருச்சிராப்பள்ளி-2. போன் : 0431-2700417.

பதிப்புரை

பதிப்பாளர் : தில்லை. எஸ்.கார்த்திகேயசிவம்
ஆதிசைவர்கள் நலவாழ்வு மையம், கள்ளக்குறிச்சி

அன்புடையீர் வணக்கம்.

எல்லாம்வல்ல ஸ்ரீதில்லைநாதன் திருவருளால் "**ஆதிசைவப் பிரபாவம்**" என்ற நூல் வெளியிடப்படுகின்றது.

"**ஆதிசைவப் பிரபாவம்**" என்ற இந்நூல் வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம் ஸ்ரீசோமசுந்தர நாயகர் அவர்களால் இயற்றப்பட்டது.

இவர்கள் 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவப் பெரியவர். சைவ சமயத்திலும், சித்தாந்த நெறியிலும் தீவிர பற்றுக் கொண்டவர்கள்.

இவர்கள் காலத்தில் சைவசமய குருமரபாக விளங்கும், ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்களின் குருத்துவத்திற்கு பாதிப்புகளும், பொய்யுரைகளும் எழுந்தன. குறிப்பாக மாயாவாதிகள் ஆதிசைவ அந்தணர்களைத் தாழ்வாக கருதிய காலம். எனவே மாயாவாதிகள் கருத்துக்களைக் கண்டித்து, ஆகமங்களில் கூறப்பட்டுள்ள ஆதிசைவர்களின் பெருமைகளை, மேன்மைகளை எடுத்துக்கூறி, ஆதிசைவர்களின் குருத்துவத்தை நிலைநிறுத்துகின்றது இந்நூல்.

இந்நூல் மறுபதிப்புச் செய்திட இரு காரணங்கள்: (1) நூற்றாண்டுகளுக்கு முன்பே ஆதிசைவர்கள் பெருமையை உரைக்கும் நூல். (2) காலவெள்ளத்தில் இந்நூல் அழிந்துவிடாமல், உயிர்பெறவேண்டும் என்பதும் ஆகும்.

இந்நூல் இயற்றப்பட்ட காலம் சரியாகத் தெரியவில்லை. அடியேன் நூலகத்தில் தேடியதில் ஸ்ரீசோமசுந்தர நாயகர் எழுதிய சித்தாந்த ரத்நாகரம் நூல் கிடைத்தது. இந்நூல் 1885 வெளியிடப்பட்டு உள்ளது. இந்நூலின் பின் பக்கத்தில் நாயகரின் பிறநூல்கள் பற்றிய குறிப்புகள் உள்ளது. அந்த நூல் வரிசை பட்டியலில் நிறைவில் ஆதிசைவப் பிரபாவம் குறிக்கப்பட்டு ஆதிசைவப் பிரபாவம் 1885-ஆம் ஆண்டுக்கு முன்பே எழுதப்பட்ட நூல் என்பதும், 1885-ல் ஆதிசைவ பிரபாவம் இரண்டாம் பதிப்பு வெளியாக சித்தமாகி உள்ளது என்பதும் தெரிய வருகின்றது. (இந்நூலில் பார்க்க : பக்கம் 10, 11).

ஸ்ரீ சோமசுந்தர நாயகர் காலம் 1846 முதல் 1901 முடிய ஆகும். நாயகர் எழுதிய முதல் சைவ நூல் வெளிவந்த ஆண்டு 1873 என்பதால், அதற்குப் பிறகே நாயகர் ஆதிசைவப் பிரபாவம் என்ற இந்நூலை எழுதியிருக்கவேண்டும். அவ்வாறாகில் உத்தேசமாக 1875 முதல் 1880 என்று கொள்ளலாம்.

எனவே 'ஆதிசைவப் பிரபாவம்' என்ற இந்நூல் ஸ்ரீசோமசுந்தர நாயகர் அவர்களால் இன்றைக்கு சுமாராக 140 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது என்பது தெரிய வருகின்றது.

இன்றைக்கு 140 ஆண்டுகளுக்கு முன்பே ஆதிசைவர்களின் பெருமைகளை கூறும் இந்நூல் மீண்டும் மறுபதிப்பாக, நமது ஆதிசைவர்கள் நலவாழ்வு மையம் சார்பாக வெளிவருவது சிவப்பரம்பொருள் கருணையே ஆகும்.

இந்நூல் மறுபதிப்பாக வெளிவர மகிழ்ச்சியோடு பொருள் உதவிசெய்து, தமது மணிவிழா மலராக வெளியிட இசைந்த **முடிகொண்டான் சிவஸ்ரீ K.சந்திரசேகர சிவாசாரியார் அவர்களுக்கு நமது மனமார்ந்த நன்றிகளும் வந்தனங்களும்.**

இந்நூலை அழகுற அமைத்து, முதற்பதிப்பில் இருந்த சொற்களை பதம் பிரித்து தந்து, இந்நூல் வெளிவர பல நிலைகளில் உதவிபுரிந்த திருச்சிராப்பள்ளி, ஸ்ரீகணநாத நாயனார் நூலக போற்றுநர், சிவத்திரு. மு.ஜயக்குமார் அவர்களுக்கும் நமது உளமார்ந்த நன்றிகள்.

இந்நூலின் மூலநூலில் தெலுங்கில் இருந்த ஆகம ஸ்லோகங்களை மொழி பெயர்த்துத் தந்துதவிய தேவடாண்டலம் பாலாஜி குருக்கள் அவர்களுக்கும், ஆகம ஸ்லோகங்களை க்ரந்த தமிழில் வடிவமைத்துத் தந்த, சேந்தமங்கலம் சிவஸ்ரீ எம். கணேசசிவம் அவர்களுக்கும் உளமார்ந்த நன்றிகள்.

முதற்பதிப்பில் உள்ள தமிழ் எழுத்துக்களை இக்காலத்திற்கு படிக்க ஏதுவாக பதம் பிரித்து மூலநூலில் உள்ளவாறு, சிறு மாற்றமும் இன்றி இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

அன்பர்கள் அனைவரும் படித்து பயன்பெற வேண்டுகிறோம்.

சிவார்ப்பணம்.

"வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்"

சூளை ஸ்ரீ சோமசுந்தர நாயகர் வரலாறு

- தொகுப்பு : **தில்லை. எஸ்.கார்த்திகேயசிவம்**

தொண்டை நாடு சான்றோர் உடைத்தது என்பார்கள். அந்த தொண்டை நாட்டைச் சேர்ந்த சென்னை மாநகரத்தில் சூளை பகுதியில் ஸ்ரீ சோமசுந்தர நாயகர் பிரபாவ ஆண்டு ஆவணி மாதம் 2ம் தேதி, 16-8-1846 ம் ஆண்டில் பிறந்தார்.

அவரது பெற்றோர் ராமலிங்க நாயகர், அம்மணி அம்மாள்ஆவர். இளமையில் பெற்றோர் இவருக்கு சூட்டிய பெயர் அரங்கசாமி ஆகும். இவர்கள் குடும்பம் வைணவத்தைச் சார்ந்த வன்னிய, சத்திரிய குலமாகும்.

இவரது உறவினராக விளங்கிய அச்சுதானந்த சுவாமிகளிடம் சிறுவயதிலேயே வடமொழி பயின்றார். வடமொழியில் உள்ள வேதம், ஆகமம், இதிகாசம், புராணம், உபநிஷத்கள் ஆகியவற்றில் ஆழங்கால்பட்டு விளங்கினார். தென்மொழியாம் தமிழிலும் புலமை பெற்று விளங்கினார். ஆங்கிலமும், தெலுங்கும் கற்றதனால் நான்கு மொழிகளிலும் புலமை பெற்று விளங்கினார். இவர்களுக்குத் தகுந்த அரசு உத்யோகமும் கிடைத்தது.

இவர்கள் குருவாக விளங்கிய அச்சுதானந்த சுவாமிகள், இவரை இளம்வயதில் சோமசுந்தரம் என்றே அழைத்தார். இப்பெயரே பிற்காலத்தில் நிலைத்து நின்றது.

ஸ்ரீ நாயகர் வாழ்ந்த காலத்தில் மாயாவாதக் கொள்கை வெகுவாக தமிழகத்தில் பரவியிருந்தது. அச்சுதானந்த சுவாமிகளும் இவருக்கு மாயாவாதத்தையே கற்பித்தார். ஆனால் ஸ்ரீசோமசுந்தர நாயகர் அவர்கள் சிந்தித்து பல கேள்விகளை எழுப்பியபொழுது, அச்சுதானந்தரால் பதிலளிக்க இயலவில்லை.

இந்நிலையில், கறையான் குட்டை சபாபதி முதலியார், மதுரை நாயகம் பிள்ளை இவர்கள் மூலம் மெய்கண்ட சித்தாந்த சாத்திர நூல்களைக் கற்றார். சைவசித்தாந்த தத்துவத்தில் இவர்கள் மனம் லயம் கொண்டது. சிவபெருமான் திருவருளை பெற்றுய்ய உன்னத நெறி சைவசித்தாந்த நெறியே என்று உணர்ந்தார். சைவ சமயமே சமயம், சைவத்தின் மேற் சமயம் வேறில்லை. சிவமாம்

தெய்வத்தின் மேல் தெய்வம் வேறில்லை என்ற உண்மையை உணர்ந்தார்.

அது முதல் சிவபெருமானின் பெருமைகளை பரப்பவும், ஆகம சித்தாந்த தத்துவங்களைப் பரப்பவும் தம் வாழ்வை முழுமையாக அர்ப்பணித்தார் சோமசுந்தர நாயகர் அவர்கள். சைவ போதனைக்கு தமது உத்யோகம் தடையாக இருப்பதை உணர்ந்த நாயகர் 1881ல் தனது வேலையை விட்டு நீங்கினார்.

குரு அச்சுதானந்த சுவாமிகளும், சிஷ்யன் சோமசுந்தர நாயகர் அவர்களும், சைவமரபின்படி காஞ்சிபுரம் முத்து கச்சபேசக் குருக்களிடம் சிவாகமதீக்ஷை பெற்றனர். சைவ சித்தாந்திகளாக ஆகினர் இருவரும். அச்சுதானந்த சுவாமிகள் சிவதீக்ஷைப் பெற்று, "ஏகாம்பர சிவயோகி" எனும் தீக்ஷாநாமம் பெற்றார்.

அதுமுதல் குருவும் சிஷ்யனும் சைவசமய போதகராயினர். தமிழகம் எங்கும் தமது சிம்மக்குரலால் ஸ்ரீ நாயகர் சிவமணம் பரப்பினார். எங்கும் சைவசித்தாந்த நெறியைப் போதித்தார்கள். சிவபெருமான் அருளிய வேதஆகமங்களில் இருந்து பல உதாரணங்களை மடையெனப் பொழிந்து சைவசமயத்தைப் பரப்பினார்கள்.

சைவசமயத்தின் கோட்பாடுகளை, உள்ளங்கனி நெல்லிக்கனி போலும், நெஞ்சுரத்தோடும், சைவஞானவரம்புக்குட்பட்டு சிவஞான உரத்துடன் வெளிப்படுத்தினார்கள்.

1868 ல் ஸ்ரீ நாயகர் எழுதிய "வேதபாஹ்ய சமாஜ கண்டனம்" என்ற நூலும், 1873 ல் எழுதிய "சிவாதிக்ய ரத்நாவளி" என்ற நூலும் இவர் புகழை வெளிக்கொண்டுவந்தது.

ஸ்ரீ நாயகரின் பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் பலரைக் கவர்ந்தது. அதில் வேதாசலம் என்ற மறைமலையடிகள் முதன்மையானவர். மறைமலையடிகளுக்கு சைவசித்தாந்த தத்துவத்தை முதலில் அறிமுகம் செய்து போதித்தவர் ஸ்ரீ நாயகர் அவர்களே. மறைமலை அடிகள் தம் குருவாக இவரைப் போற்றினார்.

ஸ்ரீ சோமசுந்தர நாயகர் சைவசமய ஸ்தாபனமும், புறச்சமய நிராகரணமுமே தலையாய குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தார்.

சைவசமயத்தை, சிவப்பரம்பொருளை இகழ்வோருக்கு தமது பேச்சு எழுத்தின் மூலம் தகுந்த விளக்கம் அளித்து அவர்களைச் சிதறடித்தார்.

சைவசமய உலகில் சிம்மமாக வலம் வந்தார். மாயாவாதிகள் மற்றும் வைணவர்களின் சைவ சமயம் பற்றிய பொய்யுரைகளை மறுத்து பல நூல்களை வெளியிட்டுள்ளார்கள்.

இவர்களின் சைவசமயப் பணிகளைக் கண்டு வியந்து, இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்கள், இவர்களுக்கு, **''வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்''** என்ற பட்டத்தை வழங்கினார்.

அதுபோல் வேதாந்த சிங்கமாக விளங்கிய ஸ்ரீ விவேகானந்தர், அமெரிக்கா சிகாகோ நகரில் நடந்த சமய மாநாட்டில் இந்துசமயப் பெருமைகளை சொற்பொழிவு ஆற்றி புகழோடு தாயகம் திரும்பியபொழுது, மன்னர் பாஸ்கர சேதுபதி விவேகானந்தரை வரவேற்றுத் தமது அரசவையில் சோமசுந்தர நாயகரை சந்திக்க ஏற்பாடு செய்தார்.

அப்பொழுது நாயகர் விவேகானந்தரிடம், வேதாந்தம் போன்று ஆகமங்களின் சாரமாக விளங்கும் சைவசித்தாந்த தத்துவத்தை எடுத்துக் கூறினார். அதுவரை சித்தாந்தம் அறியாத விவேகானந்தர் வியப்புற்றார். சித்தாந்த தத்துவத்தை விவேகானந்தருக்கு உணர்த்தியவர் ஸ்ரீ சோமசுந்தர நாயகர் அவர்களே.

திருவாவடுதுறை ஆதீனம் இவர்களுக்கு, **''பரசமயக் கோளரி''** என்ற பட்டம் வழங்கி சிறப்பித்தார்கள்.

சாம்பவர்கள் **''சைவ மார்த்தாண்டம்''** என்ற பட்டம் வழங்கினார்கள்.

திருஞானசம்பந்தப் பெருமானை தம்முதல் குருவாகப் போற்றி துதித்தவர்.

ஸ்ரீ சோமசுந்தர நாயகர் அவர்கள் 126 நூல்கள் எழுதியதாகத் தெரிகின்றது. இவரது மாணாக்கர் பல்லவபுரம் அப்பாவு செட்டியார் அவர்கள், இவர்கள் நூல்கள் சிலவற்றை வெளியிட்டுள்ளார்கள்.

ஸ்ரீ நாயகரின் மற்றொரு மாணாக்கராகிய மறைமலை அடிகள் தாம் எழுதியுள்ள "சோமசுந்தர நாயகர் வரலாறு" என்ற நூலில், நாயகரின் 40 நூல்களை வரிசைப்படுத்தியுள்ளார்.

ஸ்ரீ சோமசுந்தர நாயகர் அவர்கள் 22-02-1901 மாசிமாதத்து ரேவதி நட்சத்திரம் வெள்ளிக்கிழமை அன்று சிவபக்தர்கள் திருவாசகம் ஓத திருநீறு தரித்த மேனியராய் மாலை ஆறு மணிக்கு சிவனடி நிழலை அடைந்தார்.

தனது குருவின் மறைவினால் மனம்கலங்கிய மறைமலை அடிகள் "சோமசுந்தர காஞ்சி" என்ற இரங்கற்பா நூலைப் பாடி அஞ்சலி செலுத்தினார்.

"ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அவர்கள் 'சைவ சண்டமாருதம்' சூளை சிவஸ்ரீ சோமசுந்தர நாயகர் அவர்களின் மறைவு நிகழ்விற்கு சென்றிருந்தார்கள். அப்போது அங்கு கூடியிருந்த அடியார்களிடம் "வாழ்வாங்கு வாழ்ந்த நாயகர் சிவமாகிப் போனார். ஆகவே இதனைச் சாதாரண இறப்பு நிலையாகக் கருதி யாரும் தீட்டு நீக்க இல்லம் சென்றபின் குளித்துவிட வேண்டாம். சிவத்திற்கும் தீட்டு இல்லை, நாயக்கருக்கும் தீட்டு இல்லை" என்று அறிவிப்பு செய்தார்கள்.

இராசாங்கசமயம்(சூளை சிவஸ்ரீ சோமசுந்தர நாயக்கரின் அருள் வரலாறை விளக்கும் நூல்) என்னும் நூலில் இக்குறிப்பு உள்ளது.

இவர்தம் சீடர்கள் இவர்களைப் புகழ்ந்து, சோமசுந்தர மும்மணிக்கோவை, சோமசுந்தர நாயகர் தோத்திர சோடசம், சோமசுந்தர ஸ்தவம் எனும் நூல்களை எழுதியுள்ளனர்.

ஸ்ரீ சோமசுந்தர நாயகரின் சைவத்தொண்டும், சிவப்பற்றும் என்றும், போற்றுதற்குரியது.

வாழ்க அவரது திருநாமம் !! வளர்க சித்தாந்த சைவநெறி!!

சிவார்ப்பணம்.

இந்நூலின் பழைய பதிப்பின் முதல் பக்கம்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசம்பந்ததீர்த்தசரணாயநமஃ

ஆதிசைவப்பிரபாவம்.

காப்பு.

எவனுயர்கவுணியர் தவமுதலெனவரும்
எவனுமைதருமுலை யமுதுணவெழுதரும்
எவனொளிர்சிவமரி பெறவுளமிசைதரும்
அவனருள்பெறும்வகை யடைதிநன்மனனே.

நூல்.

1) (𑌤𑍍𑌵𑌂 𑌦𑍇𑌵𑍇𑌷𑍁 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌹𑍍𑌯𑌹𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌷𑍁 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃। 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌧𑌿𑌕𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌃) என்னுஞ் சுருதிநிஷ்டராய் விளங்குஞ் சிவபெருமானை யடைந்து மலமாயாமோசனம் பெறவேண்டிய சேதனர்களில் சிவசம்பந்த விசேஷத்தால் சிவபெருமானுடைய முகத்திற் பிறந்த பிராம்ஹணர் ஆதிசைவரெனவும், பிரம்ஹதேவன் முகத்திற் பிறந்த பிராம்ஹணர் மஹாசைவரெனவும், அவனிடம்பிறந்த க்ஷத்திரியர் வைசியர் அநுசைவரெனவும், சூத்திரர் அவாந்தரசைவரெனவும், அநுலோமர் பிரவரசைவரெனவும், பிரதிலோமர் அந்யசைவரெனவு முண்மைநூல்களிற் படிக்கப்பட்டனர். இங்கே பெறப்பட்ட சைவத்வம் சிவதீக்ஷாநந்தரம் சிவாகம மங்கீகரிக்குமன்றியந்யதா அசைவசித்தியே பிராப்தமாம். இதனால் சமஸ்தமானபேரும் சிவதீக்ஷாவான்களாத லவசியமென்பது பெறும். இவர்களுள், ஆதிசைவர் சிவமுகோத்பவரான வப்போதே சதாசிவமூர்த்தியால் தீக்ஷிகப்பெற்று ஏனையபிராம்ஹணாதியர்க்கு ஆசாரியர்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீசம்பந்ததீர்த்தசரணாய நம:

சித்தாந்தரத்நாகரம்.

அர்ச்சாதியம்.

இஃது,

சித்தாந்தத்தலைவர்க்குத்

தொண்டுபூண்டொழுகும்

ஆ. ஸோ,

சோமசுந்தரநாயகரவர்களால்

இயற்றப்பட்டது.

Madras:

PRINTED AT THE EMPRESS OF INDIA PRESS.

1885. (1885)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அச்சிற்பதிப்பித்த புத்தகங்கள்.

	ரூ.	அ.	பை.
சிவதத்வசிந்தாமணி சிவாதித்யரத்னாவளி முதற்பாகம் ,, 2-வது பாகம்	2	8	0
சைவகுருமாமணி...	1	8	0
கூரேசவிஜயபங்கம்...	0	1	0
ஆபாசஞானநிரோதம் சித்தாந்தசேகரம்	1	12	0
சித்தாந்தபூஷணம்...	0	6	0
உத்தமவாத தூலவாதூலம்...	0	9	0
தணிகாசலஸ்தவம்...	0	6	0
சமரசஞானதீபம்...	0	3	0
ஆளுடையபிள்ளையார் வெண்பாவந்தாதி...	0	3	0
சித்தாந்தவுத்தியார்...	0	2	0
குதர்க்கவாதவிபஞ்சினி...	0	4	0
அர்ச்சாதீபம்...	0	12	0

சிவபாரம்யப்பிரதரிசினி
பாரததாற்பரியசங்கிரகம்
ஆதிசைவப்பிரபாவம் } இரண்டாம்பதிப்பு சித்தமாகின்றது.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீசம்பந்ததீர்த்தசரணாய நம:

ஆதிசைவப் பிரபாவம்

காப்பு

எவனுயர்கவுணியர் தவமுதலெனவரும்
எவனுமைதருமுலை யமுதுணவெழுதரும்
எவனொளிர்சிவமரி பெறவுளமிசைதரும்
அவனருள்பெறும்வகை யடைதிநன்மனனே.

நூல்

க. ஶைவேஷு ப்ராஹ்மணா ஹ்யாஹ்யு
ஹம்ஶஶு ஹ்யேஷு ப்ராஹ்மண:
விஶ்லாஶிகொஶு ஹ்யேஶஷஷிடு:

என்னுஞ் சுருதிநிஷ்டராய் விளங்குஞ் சிவபெருமானையடைந்து மலமாயாமோசனம் பெறவேண்டிய சேதனர்களில் சிவசம்பந்த விசேஷத்தால் **சிவபெருமானுடைய முகத்திற் பிறந்த பிராம்ஹணர் ஆதிசைவரெனவும்,** பிரம்ஹதேவன முகத்திற் பிறந்த பிராம்ஹணர் மஹாசைவரெனவும், அவனிடம்பிறந்த க்ஷத்திரியர் வைசியர் அநுசைவரெனவும், சூத்திரர் அவாந்தர சைவரெனவும், அநுலோமர் பிரவரசைவரெனவும், பிரதிலோமர் அந்யசைவரெனவும், முண்மை நூல்களிற் படிக்கப்பட்டனர். **இங்கே பெறப்பட்ட சைவத்வம் சிவதீக்ஷாநந்தரம் சிவாகமம் அங்கீகரிக்குமன்றியந்யதா அசைவசித்தியே பிராப்தமாம். இதனால் சமஸ்தமானபேரும் சிவதீக்ஷாவான்களாதல் அவசிய மென்பது பெறும்.**

இவர்களுள், ஆதிசைவர் சிவமுகோத்பவரான அப்போதே சதாசிவமூர்த்தியால் தீக்ஷிகப்பெற்று ஏனைய பிராம்ஹணாதியர்க்கு ஆசாரியர்களாக நியோகிக்கப்பட்டனர். **இவர்கள் ஸ்வயம் ஆசாரிய புருஷர்களாதல் பற்றியே யன்றோ பிரமாண மூலத்தாலும், உலக வழக்கத்தாலுங் குருக்களென வழங்கப் பட்டு வருகின்றனர்?** சேதனர்களிற்றமக்கு மேலொருகுருவைப் பெறாமலும், தாமே பிராம்ஹணாதி சாதுர்வர்நத்தார்க்குங்

குருக்களாகியும் விளங்கும் உண்மையே யன்றோ அவரையாவருங் குருக்கள் குருக்களெனத் துதிக்கின்றனர்?

குருவுக்குள்ள தர்மம் சிவனைக்காட்டுவதாகவே யன்றோ வேதாகமத்துணிபு?

சிவன் இன்னதன்மையனென் அறிவரியான் ஆகையால் அவனையடையும் ஏதுவாக விதிக்கப்பட்ட சிவாலய சேவையாதி களில் மேலே குருக்களெனத் துதிக்கப்பெற்ற சைவாசாரியரையன்றி யெவனோ ஸ்வதஹாவவற்றைப் பெறவல்லவன்?

சுத்தபுவனவாசிகளாகிய அவரிடம் தீக்ஷைவகித்து மஹா சைவத்வாதி சித்திகளைப்பெற்று அவர்காட்டியவாறு சிவத்தைக் கண்டு சிவப்பிரசாதத்தைப் பெற வல்லுநராகிய பிறர் அவ்வாசாரிய மூர்த்திகளைக் குருக்கள் அன்றெனவாவது, அவரிற் றாமுயர்ந்தவ ரெனவாவது அகங்கரித்து உரைப்பரேல் அவராற் பூசிக்கப்படுஞ் சிவாலயங்கட்குப் போதலும், அவர் சிவதரிசனஞ் செய்விக்கத் தரிசித்தலும், அவரிடம் விபூதி பிரசாதமுதலியவற்றைப் பெறுதலுங் கூடாவன்றோ? இன்ன பல மகிமைகளையுடைய **ஆதி சைவரிடம் பிராம்ஹணன் சிவதீக்ஷை பெற்ற வநந்தரமே அவன் மஹாசைவனாவான்.**

இப்படியே பிறசாதியாரிடமுங் கொள்க. சிவதீக்ஷாவான்களாய் விடுவரேல் அவரும் ஸ்வஜாதியிலும், தத்தமக்குக் கீழிட்ட சாதியிலும் ஆசாரியத்வம் வகிக்க உரியவராவார். இவ்வுண்மை நியாயம் பற்றியே சூத்திரர்களில் ஆசாரியர் மடங்கள் பெருகின.

ஆதிசைவர்களுக்கோ அவ்வாசாரியத்வம் சொந்தநிதி. மஹாசைவராகிய பிராம்ஹணருள் கண்ணுவ கௌதமாதிகளால் சிவநிந்தகாளாய்ப் பவித்தழிந்து போகச் சபிக்கப்பட்டமையால் ஏகாத்மவாதம், பாஞ்சராத்ர வாதம், துவைதவாதம் இத்தியாதி துர்மதப் பிரவிஷ்டராய் ஒழிந்தவர் போகப் புண்ணியபரிபாகம் மேலிட்ட சிறுபான்மையர் சிவஸம்ஸ்காரிகளாய், சைவபாஷ்ய காரரானை யநுவர்த்தித்துக்கொண்டு சைவாசாரதுல்யராகி மஹாசைவராகவே பிரகாசிக்கின்றனர்.

அநுசைவராகிய க்ஷத்திரியரும், வைசியருங் கால பலத்தால் ஆசாரங்கண்மாறி யதோசிதமாய்ச் சைவசித்தியைப் பெற்று வருகின்றனர். இவ்வுண்மை விசாரத்தால் யாவரேனும்

சிவதீக்ஷாநந்தரம் பிராப்தமாவதாகிய சைவசித்தியின்றி ஆசாரியத்வம் வகிப்பது அநாதரணியமென்றே நிச்சயிக்கப் பட்டது.

இங்ஙனநிற்க, சாபகிரஸ்தராய்க் கிடந்துழலும் பிராம்ஹணருள் பாஞ்சராத்திரம், மாத்துவம் முதலிய மதப்பிரவிஷ்டாளாய்ப் பவித்தவர் தத்தமக்குரிய முத்திரைகளாக நெற்றி மீது வெள்ளைமண்ணும், மஞ்சட்பொடியும், கரிக்கோடும் பூசித் திரிவதால் அவர் சைவ விருத்தாசாரம் உடையாரென்பது யாவருமறிவர்.

அவருள்ஒரு சாரராகிய பிரச்சின்ன பௌத்தரென்றும், மாயாவாதியரென்றும் எண்ணப் படுவாராகிய ஏகாத்மவாதிகள் ஸ்மிருதியாசாரங்களைத் தழுவினராகவும், சிவோபாசனை செய்கின்றவராகவும், பஸ்மருத்ராக்ஷதாரணம் வகித்தவராகவும் போக்குக்காட்டி வாஸ்தவத்தில் அவையாவும் வெறும் பொய்யெனப் புலம்பித் திரியும் வஞ்சகத்தையறியுங் கூரிய மதியில்லாத சாமானியர் அவர்களையே சைவபிராம்ஹணராகவும், சைவாசாரியராகவும் மயங்கியழிகின்றனர். அச்சைவ வேடங்களை அவர்தாங்கியதெல்லாம் வயிறுவளர்க்கவேயன்றி வேறில்லை.

மங்கல பதார்த்தங்களாகிய பஸ்மருத்ராக்ஷங்களை ஒழிந்தால் அமங்கலத்வம் மேலிட்டு முண்டைகளாவர்; ஆகையால் அப்போது ஒருதிரணமுந் தமக்கு யாவரானுங் கிட்டாது என்பதறிந்தே வேஷமாத்திரம் சரியாய்ப்போட்டுக் கொண்டனர்.

இப்படிப்போட்டுக் கொண்டும், சாம்பவாக்ரேசாளிட்ட சாபத்தின் உறுதியால் அவருட்பலபிராகாரத்தில் ஆசாரம் பிராபல்யப்பட்டிருக்கின்றது. சிலர் படிவிபூதியும், பொதி ருத்ராக்ஷமுந் தாங்கினவராகி யிரவும்பகலும் ராமகிருஷ்ண வாசுதேவேத்யாதி பசுநாமபஜனைசெய்து திரிவர். சிலர் பஸ்மருத்ராக்ஷ தாரணத்துடன் வாமாசாரத்தைவகித்துக் கள்ளருந்தல், புலாலுண்ணல் இத்யாதி துர்ஆசாரத்வம் பூண்டழிவர்.

சிலர் பஸ்மருத்ராக்ஷ தாரணத்துடன் சைவப்பழமென ரூபத்திற் காணப்பட்டு நெருங்கிப் பார்த்தால் எல்லாம் நானே, என்னை விட்டால் ஒன்றுமில்லை, அஹம்பிரம்ஹம், சீவேசுவர ஜகத்தியாவும் மிச்சை, இவ்விபூதிருத்திராக்ஷ சிவபூசையாவும் விவகாரமாத்திரமே யன்றியுண்மையில் பொய்யாமென்று பொங்கிப் புலம்புவர்.

இத்திறந்த சைவப்பெரியோரே யுலகமுழுதுங் கலியின் சக்தியால் பிராபல்யப்பட்டு இருப்பரெனின், எப்படியோ ஒருவன் அவர் ஆபாசங்களை யறிந்து அவரையொதுக்கி வைக்கக் கூடும்?

இவ்வசம்பிரதாய சீலர் விர்த்திபெற்றமையே யன்றோ மஹாசைவர் நீங்கலான பிறசைவருந் துர்ப்போதத்துக்கு உள்ளாகி யாம் வேதாந்திகளென வெளிப்பட்டுத் தாயேது, தந்தையேது, நானேது, நீயேது எனக்குலைத்து உலகிலழிகின்றனர்?

இப்பொய்வேடப் பேய்கள் கையிலகப்பட்ட பின்னரொருவன் றப்பிப்பிழைப்பது கஷ்டம்! கஷ்டம்!!

இச்சைவவேடம் பூண்டு திரியும் வஞ்சப்பேய்களை யொருவன் முதலில் ஆச்சிரயிக்கையிலவர் மதமுழுதுந் தெரிந்துகொண்டு, அதன்மாந்மியம் உணர்ந்தா விரும்பலாகிறான்? அவனுக்குச் சுபாவமாய் உண்டாயிருந்த சிவபக்திக்கேற்ப அவன்வழிபடவேண்டிய முறைப்பாட்டிற் "பெரியோரைப் பேணல்" என்னுந்தருமத்தைக் கடைப்பிடித்து விபூதி யணிந்தவரெல்லாம் பெரியோரென்னும் பொதுவியல் பற்றி அவ்வஞ்ச வேடத்தாரையும் அடைவதாகிறான். இதனால், மேற்பாகுபாடுகள் அறிந்தபேர் அப்படி மயங்காரென்பது வெளிப்படுகின்றது. இவ்வுண்மைகளெல்லாம் சிவத்விஜோத் கர்ஷதீபிகை என்னும் பேரால் யாமினி வெளியிடப்போகிற சத்கிரந்தவாயிலாய் உணரலாமென்க.

இது நிற்க, சிவசம்ஸ்கார ஹீனராயுள்ள ஸ்மார்த்தர் என்னும் விப்பிரவர்க்கத்துட் சிலபேர் சூத்திரருட் சிலரை மயக்கித்தாங்கள் ஆகமோக்ததீக்ஷை பிறர்க்குச்செய்யும் அதிகாரமுடையாரென வஞ்சித்துத் தங்களுக்கு அநாநுஷ்டான மாகிய அச்செய்கையைப் புரிந்து வருகின்றனர். இவர் பெருவஞ்சகரென்பதை நிரூபிப்பாம்.

சிவசம்ஸ்காரம் வகித்தவராயின் மஹாசைவத்வ சித்தி யுண்டாம் ஆகையால் அப்போது ஸ்வஜாதியிலும், மற்றைக்கீழ் ஜாதியிலும் ஆசாரியத்வம் பூண்டு பிறர்க்குச் சிவதீக்ஷாதி காரியங்களைச் செய்ய உரியவராவர்.

அங்ஙனமல்லாதபோது தமக்குச் சித்தியாத சைவத்வம் பிறர்க்குஅவருண்டு பண்ணுவது குருடன் குருடனுக்குக்கோல் கொடுப்பதுபோலாம். அவரோ ஸ்மிருதி ஆசாரம்வகித்தவர்.

ஆகமாசாரம் அறவே யொழிந்தவர். தமக்கு நெடுந்தூரமாகிய ஆகமாசாரத்தைப் பிறர்க்கவர் அநுக்கிரஹஞ்செய்வது குருட்டரிப் பாளன் குபேரசம்பத்தை யருளுவதுபோலாம்.

ஸ்மிருதியாசாரம் வகித்தவர்க்கு ஆகமாசாரம் அடக்கமாகை யால் தமக்குக் கீழிட்ட ஆசாரங்களை அதிகார பேதத்தாற் பிறர்க்கு அவர் அநுக்கிரகித்தல் சாலுமெனின், அப்போது பாஞ்சராத்திராசார முதலியவற்றையுந் தாங்கள் ஆசரித்து உபகரிக்குந் தன்மை விரும்பிவரும்.

பாஞ்சராத்திரம் சுரௌத ஸ்மார்த்த விருத்தமாகையால் ஆசரிக்கப்படாதெனின், சிவாகமாசாரம் வைதிகமும், ஸ்மார்த்த முமாகவன்றோ கொள்ளவரும்?

அங்ஙனமேல், சுரௌத ஸ்மார்த்தா விருத்தமாகிய சைவாசாரம் தங்களுக்குக் கிஞ்சித்தும் அநுட்டானத்துக்கு வராததென்னை?

சைவாசார துல்யராயுள்ள சிவவேதியரிடம் அசூயை பாராட்டி வருவதென்னை?

சுரௌதத்தில் அடக்கமாகிய ஸ்மார்த்தம் சுரௌதவிரோதம் ஆகாமையால் ஆசாரத்துக்கு வந்தபடியன்றோ ஸ்மார்த்தத்தில் அடக்கமாகிய சைவமும் ஸ்மார்த்த விரோதமாகாமையால் ஆசாரத்துக்கு வரவேண்டும்?

சுருதிகளுக்கும் ஸ்மிருதிகளுக்கும் விரோதமுண்டாகில் ஸ்மிருதியைவிட்டுச் சுருதியே பற்றத்தக்கது என்றபடி ஸ்மிருதி களுக்கும் சிவாகமங்களுக்கும் விரோதமுண்டாயிருக்கிற பாக முண்மையால் விரோதபாகங்களே யசாமஞ்சசமாயிற்றெனின், வேதாவிரோதபாக ஸ்மிருதிசம்பந்தத்தால் யாம் ஸ்மார்த்தர் என்று வெளிவருவதுபோல் ஸ்மிருத்தால் யாம் ஸ்மார்த்தர் என்று வெளிவருவதுபோல் ஸ்மிருத்யவிரோதபாக சிவாகம சம்பந்தத்தால் யாம் ஆகமிகாளென்று வெளிவராத தென்னை?

ஸ்மிருதிகளில் கொஞ்சம் விரோதமும், சிவாகமங்களில் அதிகவிரோதமும் உண்மையால் சிவாகம மசாமஞ்சஸமாயிற் றெனின், சிவாகமம் அதிகபாகம் விரோதப்பட்டபடியே யன்றோ பாஞ்சராத்திரமுங் கொள்ளத்தக்கது?

பாஞ்சராத்திரத்தில் எல்லாம் வேதவிருத்தமென்றா தள்ளக் கூடும்?

பாஞ்சராத்திரமும் சுரௌத ஸ்மார்த்தங்களுக்கு வெகுவாய் விரோதமாவது அறியாது அதைமுழுதும் அப்பிரமாணமென்பது எப்படி?

ஆனபோதுசர்வாதிகார சீலத்வம்வகித்த தாங்கள் வைதிக பாகமாகிய பாஞ்சராத்திர சம்ஸ்காரம் பிறர்க்குச் செய்யத் துணியாதது என்னை?

அன்றியும், ஸ்மார்த்த ஆசாரத்துக்கு ஆகம ஆசாரங்கள் தணிந்தன வென்று யாவர் அங்கீகரித்தவர்?

ஆகமிகாளாகிய சைவவைஷ்ணவர்கள் தங்கள் ஆசாரங்களை ஸ்மார்த்தத்திற் றணிந்தனவாக அங்கீகரித்தனரா?

சுரௌதத்தில் ஸ்மார்த்தம் அடக்கமென்றது சர்வசம்பிரதி பன்னமானபடியே யன்றோ ஸ்மார்த்தத்தில் தந்திரம் அடக்கம் என்பதும் சர்வசம்பிரதி பன்னமாதல்வேண்டும்?

எந்தச்சைவனும், எந்தவைஷ்ணவனும் அப்படி நினைக்கவுஞ் செய்யானாக வெப்படியோ ஸ்மிருதியாசாரம் ஆதிக்யத்தைப் பெறும்?

கேவலம் ஆகமிகாளாகிய அவர்கொள்ளாமையால் எமக்குப் பாதகம் உண்டாகாதெனின், கேவலம் ஆகமிகாள் என்றா லென்னை?

சுருதிக்கு விரோதபாகத்தையும் ஆகமத்தில் அங்கீகரிப் பவரென வன்றோ கொள்ளவரும்?

அவர்க்குந் தங்களுக்கும் சம்பந்தமில்லாதபோது மற்றியார்க்கோ இனித்தாங்கள் குருக்கள் தனஞ்செய்ய முயல்வது?

அவிரோத பாகத்தை அனுசரித்தவர்க்கு மாத்திரமே எனின், அவர் யாவர்? விப்பிரகோடிகளாகிய தங்களுக்கு ஸ்மிருதிகள் இருப்பதால் ஆகமம் தமக்குக் கீழிட்டவர்களுக்கே ஆசாரமாயின.

கீழிட்டவரைப் பார்க்குங்கால் அவ்வாகம ஆசாரமுடையவர் ஆதிசைவராய்க் காண்டலால் அவர்க்கே தாங்கள் குருக்களாதல் வேண்டும். ஆதிசைவர் ஸ்மார்த்தரை அற்பமும் மதியாதவர் ஆகையால் அங்கே தங்கள் குருக்கள்பட்டஞ்செல்லாது. மற்றை ஆராத்யர், ஸ்ரீ வைஷ்ணவர், மாத்துவர் இத்திறத்தவரும்

மதிக்காதவரே யாயினர். அவராசாரங்கள் கேவலம் ஒன்றிலொன்று வேறுபட்டன வாகையால்.

இனி க்ஷத்திரியாதி கீழிட்டவர்பால் செல்லுமெனின், அப்படிக்கெங்கும் அநுபவமின்மையாலது கூடாது. அவருள், வைசியர்பாலாகுமெனின், வைசியர் பிரகிருதத்தில் இரண்டு மடங்கள் பெற்றிருக்கின்றனர். ஒன்று சட்டநாதஸ்வாமி மடமும், மற்றொன்று தர்மசிவாசாரி மடமுமாம். இவற்றுள் முன்னையது ஆதிசைவாசாரிய மூர்த்திகளைக் கொண்டது ஒன்றாம். பின்னையதும் அப்படியே சுத்தசைவமடமாய் இருந்துள்ளதென்பது (தர்மசிவாசாரி) என்பதில் வந்த பட்டப்பெயரே காட்டும். சிவாசாரியர் என்பது ஆதிசைவர்க்கே உரியபட்டமாதலால்.

இந்த மடம் பிற்காலத்தில் மஹாசைவரால் அநுவர்த்திக்கப் பட்டிருந்து பிரகிருதத்தில் கேவலம் ஸ்மார்த்தமடமாய் ஒழிந்தது. இப்போது உள்ளவர்க்குப் பூர்வ பத்ததிகள் ஒன்றும் தெரியாமையாலும், கும்பகோண மடாதிபதியாகிய சங்கராசாரியரால் நூதனமாக ஏற்படுத்தப் பட்டமையாலும், கேவலம் ஸ்மார்த்தமே வகித்திருக் கின்றனர்.

இங்கே ஆகமமென்னும் பிரஸ்தாபத்துக்கே இடமின்று. அன்றியும் சிஷ்யர்களாகிய வைசியர்களுக்குச் சாட்சாத்தாகப் பட்டாபிஷேகராயுள்ள மடபதி உபதேசியாமையாலும், புரோகிதரைக்கொண்டு உபநயனாதிகள் செய்வித்தலாலும் கேவலம் அசங்கத ஆசாரமாயிற்று.

அப்படிச் செய்விக்குஞ் சடங்குகளும் வைதிகமும், ஸ்மார்த்தமும் சைவமும் அல்லாமல் கேவலம் பௌராணிக மாத்திரமாகவே ஏனைய சாமானிய சூத்திரர்க்குச் செய்விக்கும் அம்மாத்திரமாகவே ஏனைய சாமானிய சூத்திரர்க்குச் செய்விக்கும் அம்மாத்திரமாக ஒழிதலாலும்அது பிரகிருத விசாரத்திற்கு அணுத்துணையும் தங்களுக்குச் சாதகமாகாது.

பிரத்தியக்ஷத்தில் சிஷ்யர்கட்கு ஸ்மார்த்த ஆசாரம் பலக்கவி யின்றேனும் மடபதிக்கும், அவர்கூட்டத்தார்க்கும் கேவலம் ஸ்மார்த்தம் பிரகாசித்தலால் ஆலதற்கும ஆகம ஆசாரம் ஓர்

காலத்திலிருந்து இருக்கலாமென்பது கூடாதெனின், அப்போது சிவாசாரி என்னும் பட்டம் எடுபட்டுப்போம்.

அன்றியும் அதற்கு ஆகமாசாரம் பலிஷ்டமாயிருந்ததை வேறொரு மடம் பிரத்யட்சத்திலிருந்து சாட்சி கூறுவதற்கும் விரோதப் பட்டுப்போம். அது சைவாசார சம்பிரதிபன்னமாகாத போது வைதிகமடமெனவே கொள்வாம் எனின் அப்போதுண் டாகிய பாதகத்தைச் சற்றேகாட்டுவாம்.

இமசேதுபரியந்தம் வைதிகர் எனத்திரியும் ஸ்மார்த்தர் அனைவரும் சங்கராசாரியர்க்குச் சிஷ்யரெனத் தங்களை அங்கீகரித்து இருக்கின்றனர். அதனால் ஸ்மார்த்தாசாரம்வகித்த வைசியமட பதியும் சங்கராசாரியர் சிஷ்யரேயாவர்.

அப்படிக் கூறுவதிலவர்க்கும், அவர் சிஷ்யர்களுக்கும் ஒப்பில்லை யாவதோடு சங்கராசாரியரை அம்மடபதியொரா ஒரு காலத்திலுஞ் சந்திக்க உடன்படார் ஆகையால் அவரை வழிபடல் முதலிய சத்காரங்களைக் கனவினும் நினையாதவர் என்பது வெளிப்படுகின்றது.

ஆகவே, அவர்க்கு அடக்கமான மடமென்பது ஒழிந்தது. இதனாலது ஸ்மார்த்த மடமாகாமை வெளிப்பட்டது. பூர்வ மரியாதை நோக்கத்தாலேயே இப்போது சங்கரமடத்தார்க்கு இவ்வைசியர் மடம் அடங்காமை வெளிப்பட்டதனால் பிரகிருதத்தினிகழும் ஸ்மார்த்த ஆசாரங்கள் அசப்யமாக வந்தேறின என்றே நிச்சயிக்கப்பட்டன.

மேல் விசாரத்தால் சைவமடம் ஸ்மார்த்தரால் அபகரிக்கப் பட்டதென்பது மாத்திரம் உணரப்பட்டதேனும் அருந்தாமநுஷ்டிக் கற்பாலதல்லாத ஆகம ஆசாரத்தைத் தமதுசிஷ்யர்கட்கு உணர்த்திற் றிலர்.

தம்மாசாரத்தையே புராணரீதியால் தம்மதச் சார்பினராகிய புரோகிதரைக் கொண்டு நிகழ்த்திவருதலால் வீணாசை கொண்டு தமக்கில்லாத ஆகம ஆசாரத்தைப் பிறர்க்குச் செய்விக்கமுயலும் அந்தபரம்பரையார்க்கு அதனாலுமொரு சாதகமும் உண்டாக வில்லை. இனித்தாமே வைசியரென வேறுவகையால் வெளிப்பட்டிருக்கும் கோமுட்டிச் செட்டிகட்கு ஆகமாசாரம்

அறவே கிடையாமையால் அவரிடத்துந் தமக்குயாதொரு அநுகூலமுமில்லை.

இனிச் சூத்திரரோவெனின், பலமுகப்பட்டவருள் வேளாளரே சற்சூத்திரத்வம் வகித்துப் பிராபல்யராய் இருத்தலால் அவரடங்கலும் ஆதிசைவரையே ஆசாரியர்களாக வகித்திருக் கின்றனர்.

அன்றியும், ஸ்வஜாதியில் ஆசாரிய மடங்கள் பிரபலப்பட்டிருப்பதால் அவருக்குத் தீக்ஷாதிகாரியங்கள் அம்மடச் சார்புகளானும் ஆசாரத்தில் வந்திருக்கின்றன. இப்படி ஆதி அந்தமாக விசாரிக்கையில் தமக்கொரு ஆசாரமும், பிறர்க்கொரு ஆசாரமும் பாராட்டி வரும்படபதிகள் கிடையாமையாலும், அப்படிச் செய்யப் பிரமாணம் இல்லாமையாலும் இவற்றிற்கு விரோதமாக வீண்பிரகடனத்தால் சீவனார்த்தத்தை அபேக்ஷிப்பார்கோள் கேவலம் அசாமஞ்சசமாயிற்றென்க.

இதுகாறும் செய்தவிசாரத்தால் அவிரோத பாகத்தை அநுசரித்தவர்க்கேயாம் குருக்களாதல் செல்லுமென்ற பிரஸ்தாபம் சொப்பனவத்தாய் ஒழிந்ததால் அவர் செய்யப் போவதாகிய அவ்வவிரோதபாகத்தையுஞ் சற்றே பரியாலோசிப்பாம்.

சிவாகமத்தில் பெறப்பட்ட ஔத்திரி இத்யாதிகள் என்னும் சமயாதி தீக்ஷைகளே தாம் பிறர்க்குச் செய்யத் துணிவதால் அவைகளே அன்றோ தம் அவைதிகத்தில் அவ்விரோதமாதல் சாலும்?

அது அவிரோதமாகையில் விரோத பாகங்கள் யாவை?

சரியை கிரியை யோக ஞானங்கள் அவற்றிற் பிரதிபாதிக்கப் படுவனவன்றோ விரோதமாகும்?

அவையும் விரோதம் எனின் முற்றும் அவிரோதமாகிய சிவாகமம் தமக்காசாரம் ஆகாமற் போன தென்னை?

அநியாயத்தில் விரோத விரோதங்கள் அவற்றில் உண்டென்று நிந்தைக்கும் இடஞ் செய்ததென்னை?

மேல்நியாயத்தால் சிவாகமம் விரோதபாகத்தைக் கொள்ளாதது அப்பிரமாணமெனவேர்ப்பட்டதால் அதைத் தமக்கு ஆசாரமாகக் கொள்ளாதது பெருந்தாழ்வு என்க.

சிவாகமங்கள் சிவபெருமான் சொல்லி அருளினவும், ஸ்மிருதிகள் மஹறிஷிகள் சொல்லி அருளினவும் ஆகையால் மஹறிஷிகள் கூறிய பசுவாக்கியங்களிலும் பதிவாக்கியமே யன்றோ பவிஷ்டத்தையடையும்? நல்லழகிது!

ஆசாரியர்களாகிய தங்களுக்குப் பசுவாக்கியப் பிரமாணமும், சிஷ்யர்களாகிய பிறருக்குப் பதிவாக்யப் பிரமாணமும் ஆசாரமாகுதல் ஆச்சரியம்! ஆச்சரியம்!! மேல் தங்கள் விவகாரதடஸ்த முகத்தானே சிவாகமம் சுருதி விரோதம் எய்தாமையும், ஸ்மிருதிகள் சுருதிவிரோதம் எய்துதலும் பெறப்பட்ட சீர்ப்பாட்டாலும் அவ்வாசாரியர் கோள் கேவலம் அசங்கதமாயிற்று.

ஆசாரியர்களாகிய தாங்களே வேதவிருத்தரும், சிஷ்யர்களாகிய பிறரே வேதாவிருத்தருமாக வேர்ப்படுகையால் வேத விரோதி களாகிய ஸ்மார்த்தராகியதாம் வேதாவிரோதமாகிய சைவாசாரத்தைப் பிறர்க்கு எப்படி அநுட்டிக்கச் செய்தல் கூடும்? இப்படிப் பெருங் குழப்பத்துக்கு இடமான பிரகடனத்தில் அந்நூதனா சாரியர்கள் தலையிட்டுக் கொண்ட தன்மை அவிவேகம்! அவிவேகம்!!

மேல், அவரிப்படிப் பிரவேசித்த சந்திதான் யாதென விசாரிக்கில், **★ஜீவனமாத்திரமேயன்றி வேறு நியாயம் புலப்படற்பாலதன்று.** இது அவர் செய்தல் உபயப் பிரஷ்டத்தையே பயக்குமென்க. எங்ஙனமெனின், ஸ்மார்த்த ஆசார துல்யராகிய வன்னோர் தாம் பரம பாவனமாகக் கொள்ளாததும், அதனால் அநுஷ்டானத்தைப் பெறாததுமாகிய சைவ தீக்ஷையைப் பிறர்க்குச் செய்யுங்கால் அதன் பிரயோசனம் அதைப் பெறுவார்க்குச் சித்திப்பது எங்ஙனங்கூடும்?

கீழிட்ட அதிகாரி மேலிட்ட சம்ஸ்காரத்தைச் செய்வதும், அதைப் பிறர் அங்கீகரிப்பதும் **(குட்டித் திரட்கரடியா றொழுகக்கோன் குதித்துக், கட்டிப்புதைந்த கதையாகும்)** என்றபடியன்றோ கொள்ளவரும்?

தனக்குக்கைவராத பெரியவித்தை யொன்றை யொரு சாமானியன் மற்றொருவனுக்கு உணர்த்துதலேயன்றோ ஈண்டு உவமித்து உரைக்கற்பாலது?

இப்படி விசாரித்தறிவார் சிவதீக்ஷாஹீனராகிய அவரை ஆசிரியராக அடுத்தல் செய்யார்! செய்யார்!!

இது நிற்க, குருக்கள் பட்டங்கட்டிக் கொள்ள விரும்பி வெளிப்பட்ட அவ்வாசாரியரது ஸ்வமத ஆசாரப்படிக்கே உண்மையை விசாரிப்பாம். அவரோ ஸ்மார்த்தர் வைதிகரெனவுஞ் சொல்லப்படுவர். **அவர் சொந்தமதத்தில் சிவாகமம் பிரமாண மாகாது. அவர்க்குமூலகுருவாகிய சங்கராசாரியர் தமது ஏகாத்மவாத பாஷ்யத்தில் சிவாகமத்தை யநாதரணியமென்று கொண்டிருப்பது உண்மையாகையால்.** ஆகவே, அவரை அநுசரித்த பேர்க்கு அவ்வாசாரம் சாமஞ்சசமாவதெப்படி?

தாம் கொள்ளாமல் பிறர்க்கேயதுசெய்தலால் குற்றமென்னை யெனின், தம்மாசாரத்தை யொழித்துப் பிறராசாரத்தை யுலகில் விர்த்திசெய்வது யுக்தமாவதெப்படி?

இதனால் ஸ்வமத ஹானியைத் தாமே தேடிக்கொள்வதாக வன்றோமுடியும்? (ஹானி-கேடு-அழிவு).

இதுவரையாம்விவகரித்து வந்ததெல்லாம் பிரச்சின்ன பௌத்தாளாகிய ஏகாத்மவாதிகளில் ஏகதேசிகளைப் பற்றியே ஆகையால் அருள் பெரும்பாலாரைப் பற்றி யோசிப்பாம்.

சூதசம்ஹிதை முதலிய நூல்களில் வைதிகரும், சைவருந் தத்தம் ஆசாரங்களில் பிறழாமலிருக்க வேண்டுமெனவும், ஒருவர் மற்றொருவர் ஆசாரத்தையாசரிக்கப் படாதெனவும், ஒருவரை யொருவர் தொடவுஞ் செய்தல்கூடா தெனவுங் கண்டோக்தியாய்க் கூறியிருக்கும் நிர்ப்பந்தங்களிற் கட்டுண்ட தன்மையால் ஸ்வாசாரத்தையன்றிவேறு ஆசாரங்களைத் தாங்கள் அநுட்டிக்க வாவது, பிறரை அநுட்டிக்கச் செய்யவாவது ஒருபோதுஞ் செய்யார்.

தம்சமயத்தையே விர்த்திக்குக் கொண்டுவரு முயற்சியன்றி வேறொன்றினையுஞ் செய்யார். தம்மபோலிவேதாந்தத்தை யுபதேசஞ் செய்வதோடு அவரவர்ஜாதி வர்நாசிரமத்துக்கு இசைய ஸ்மிருதி புராணங்களை ஆதரித்துத் தக்கபடியான ஆசாரங்களிற் செலுத்தி நடத்திவருவர். இப்படிச் செய்வதில் யாதோர் ஆட்சேபமும் ஒருவராலும் செய்ய இடமின்று.

இப்படிக்கன்றி ஸ்மார்த்தாசாரியானவன் தனக்கில்லாத சைவாசாரத்தை மற்றொருவனுக்கு உபதேசிப்பதற்குப் பிரமாணம் யாதென்பதையன்றோ முன்னர்ப் பரியாலோசிக்க வேண்டும்? ஒருபிரமாணமுமில்லையென்பதை யீண்டு வெளிப்படுத்துவாம்.

கிரணாகமத்தில்,

ீக்ஷஹீநஸ்யெ விஸ்ராஃ நக்ஷாசாயபூா ஸவஙிதெ।
உகுணாபுஉவெி வணாபநாஂ ஶிவஸஂஸ்காரகரீ க்ஷஉபணி॥

என்னும் வசனத்தால் தீக்ஷா ஹீனராயுள்ள பிராம்ஹணர்கள் நாலுவர்நத்திலும் சிவதீக்ஷை செய்யும் ஆசாரியர் ஆகமாட்டார்கள் என்று பெறப்பட்டது.

அன்றியும்,

அஉிக்ஷிதெநவிப்ரேண உிக்ஷிதொயாஉிஶாநவஃ
ஶாகுஸிீநபுகஸ்யஸ்ீ ஸஉீக்ஷா நிஷ்ஃலா ஸவெக்

என்னும் வசனத்தால் தீக்ஷையில்லாத பிராம்ஹணனிடத்தில் எவன் தீக்ஷிக்கப்படு கிறானோ அவனுக்கு மந்திரசித்தியுண்டாகாது, அவன் பெறுந்தீக்ஷை வியர்த்தமாம் என்று பெறப்பட்டது. இந்த வாக்கியங்களால் சைவதீக்ஷாஹீனனாகிய ஸ்மார்த்தன் தனக்கில்லாத சிவதீக்ஷையைப் பிறர்க்குச் செய்தல் கூடுமா? கூடாதா? என்னுஞ் சங்கை பரிஷ்கரிக்கப்பட்டதோடு அவனிடம் சிவதீக்ஷை பெறுவானது தாழ்வும் வெளிப்பட்டது.

இன்ன பல பிரமாணங்கள் சிவாகமத்திலுள வென்பதை ஆராயும் அதிகாரம் இன்மையாலன்றோ இப்படி விழிக்க இடமுண்டாயிற்று?

இனிச்சிவதீக்ஷாதிகளை அநுக்கிரகிக்கும் அதிகாரிகள் யாவரென விசாரிக்கில்,

ஶூஉ்ரெஶவ கூ஧ொஜாகாஃ ஸெஷாஸ்யஃ ஸ்யாவபநாஉிஷு
ீக்ஷாயாஂ ஸவபு ஃகப்யநாஂ வரதிஷ்யாஃஷொக்ஷவெ
ஸ்வபெ வெராக்ஷணெசெவ வராயஶாதாஜிஷெசமெ
ஸ்ாகூாநாஉளசுஶஸ்தாஸ்ய ஸ்யெபவாயவாஶாயபுதெ

என்னுங் காமிகவசன பரியாலோசனையால் ஆதிசைவ குலத்திலுதித்த பிராம்ஹணர்கள் ஸ்தாபனாதிகாரியங்களில் சிரேஷ்டராகின்றனர் எனவும், சர்வவர்நத்தாருக்கும் சிவதீக்ஷயால் அநுக்கிரகிப்பதிலும், பிரதிஷ்டை, உற்சவம், ஸ்நபனம், ஸம்புரோக்ஷணம், பிராயச்சித்தம், அபிஷேகம் இத்தியாதிகளை நடத்துவதிலும், வியாக்கியான ரூபமாகச் சைவ தர்மங்களைப் பிரவசனம் செய்வதிலும் ஸ்வார்த்த பரார்த்தங்களில் அதிகாரிகளாய்ப் பவிப்பரெனவும் வெளிப்படும் உண்மையே போதுமான நிதரிசனமாம்.

இந்த வசனத்தால், சர்வாதிகாரம்வகித்த ஆதிசைவ வேதியரே பிராம்ஹணாதி சாதுர்வர்நத்தாருக்கும் அக்கிரகண்யரான பரமாசாரிய மூர்த்திகளாயினர் என்பது வெளிப்பட்டது.

இப்படிக் கண்டோக்தியாய்க்கூறும் பிரமாணதரிசநாநந்தரமும் அதிக்ஷிதராய் உள்ள ஸ்மார்த்தர் தாமுஞ் சிவதீக்ஷ செய்ய அதிகாரம் உண்டென உரைக்க நாவெழுமா?

(ஆதிமறையோதி யதன் பயனொன்றும்மறியா, வேதியர் சொன்மெய்யென்று மேவாதே) என்னும் பிரமாணம் பொய்யாது நிலைபெறுந்தன்மை யுண்மையால், துரபிமான மேலீட்டால் சில வாக்கியங்களுக்கு அபார்த்தஞ் செய்துகொண்டு அவர் தலையெடுக்கப் பார்க்கின்றனர். அதைமுன் விளக்கிப் பின்னர் அவ் வாபாசத்தையுங் களைந்தெறிவாம்.

காரணாகமத்தில்,

ஶிவெநதீக்ஷிதஶெஷவ ஶிவப்ரஹ்ணவ்யூஹதெ
ஆசிரெயவெந கதூவும் ப்ரதிஷ்டாசவநாசிகம்
அநூஜாகாரயெசூவஸ்து ஆசீசாராயவதெவஹ

என்னும் வசனபரியாலோசனையில் சிவபெருமானால் தீக்ஷ செய்யப் பட்டவர்கள் சிவப்பிராம்ஹணராகச் சொல்லப்படு கின்றனர். (சிவேநதீக்ஷித:) என்பதற்குச் சிவபூசை அர்த்தம். சிவபூசையாவது பிரதிஷ்டாதி அர்ச்சனாந்தம். (அந்யதா) என்றதற்கு இதுதவிர அன்னியர்களுக்கு உபதேசமாவது, இன்னும் வேறே சிவவிஷயமான காரியங்களாவது பண்ணினால், அது பண்ணுகிறவனையும், பண்ணிக் கொள்ளுகிற எஜமானனையும்

கொன்றுவிடும் என்று பொருள் விரித்து ஆருமில்லாதவூரில் அசுவமேதம் செய்யப் பார்க்கின்றனர். அசுவமேதம் சாமாநியம் அல்லவே!

இடிக்கும் புடைக்கும், உதைக்கும், குத்துக்கும் எல்லாந் தப்பியன்றோ ஜயம்பெற்று நிறைவேற்றத்தக்கது? அதைப் பேடிகளெல்லாஞ் செய்ய முடியுமா? சுத்தவீரனுக்கல்லவோ அது அழகு பெறும்? இங்ஙனமாக, மேல பார்த்தத்தால் வெளிப்பட்ட பண்டிதசிரோமணிகள் இவ் அசட்டுப்பொருளை எந்தச் சதஸில் நிலைபெறுத்தவல்லார்?

(சிவேந தீக்ஷிதை:) என்றால் சிவபூசை அர்த்தம் என்ற போதிலும் பயமில்லை. (சிவேந) என்பது சிவனால் என்று பெறப் பட்டதனால் சிவனால் அநுக்கிரகிக்கப்பட்ட சிவபூசை என்றே பொருளுண்டாகிச் சிவதீக்ஷையில் விரோதம் பயவாது.

இவ் உண்மையைத் தமது அறியாமையால் மறைக்கத் தொடங்கினது அக்கினியை வைக்கோலான் மூடிவைத்தது போலவேயாம். வைக்கோலைத் தகித்துவிட்டு அக்கினி மேலெழும்பிப் பிரகாசிக்குமா போலன்றோ அவரறியாமை ஹதமாகி யுண்மைவெளியிட்டு? இனி, அந்யதா என்றதனால் அந்நியர்களுக்கு உபதேசமாவது, வேறு எந்தக் காரியமாவது செய்யக்கூடாமையை உணர்த்திற்று என்றெழுந்த ஆபாசத்தையும் நிரோதிப்பாம்.

அவர் மார்ஜாலஞானம் உடையாராகையால் அதற்கேற்பவே ஈண்டும் பொருள் விரித்தனர். மார்ஜாலம் தான் கண்ணை மூடிக் கொண்டதனால் பிரபஞ்சமேயில்லை யென்று கொள்வதுபோலவே யன்றோ பிரபஞ்சமேயில்லை, எனது அஞ்ஞானமே மெய்யென்று அவர் அஹம் பிரம்மஞானம் பேசித் திரிகின்றனர்? அப்பாழ் மதத்தையே யவலம்பித்தவல் ஆகையால் ஈண்டும் அதற்கு நிர்விரோதமாய்த் தமது அஞ்ஞானவுரையையே நாட்ட வெழுந்தனர். பண்டிதராயுள்ள பேரிங்கே இருக்கமாட்டார்கள் என்பது கருதிப்போலும்.

மேலிடங்களால் ஆதிசைவர் உற்பத்தியும், அவர்க்குண்டாகிய வேற்றமும், அவர் பிறர்க்குச் செய்தற்பாலனவாகிய சமஸ்காராதி களும், அவர்பால் அநுக்கிரகத்தை அடைதற்பாலாராகிய

னதிகாரிகள் தன்மையும் செவ்வனே பெறப்பட்டமையால் இங்கே (அந்யதா) என்ற சொல்லுக்குப் பிறர்க்குச் சிவதீக்ஷை செய்யும் யோக்யதையைப் பெறாரென்று கூறும் அபார்த்தம் எப்படித் தலையெடுக்கும்?

(அந்யதா) என்னுஞ்சொல் உண்மையிற் பயக்கும் பொருள் தான் யாதெனில், **ஆதிசைவர்களுக்குக் கர்த்தவ்யமாகிய பிரதிஷ்டை அர்ச்சனை முதலியவற்றை அவர் நீங்கலாக அந்நியர் செய்யப்புகின், கேட்டையுண்டு பண்ணும் என்பதே** மேலோர் கருத்தாம். என்றதனால், **சிவத்விஜரல்லாத மஹாசைவர் முதலாயினோர் பரார்த்த பூஜைக்கு அதிகாரிகளல்லர் என்பது வெளிப்பட்டது. சிவதீக்ஷையுடைய மஹாசைவரே யோக்யர் அல்லாதபோது தீக்ஷாவர்ஜிதாளா யுள்ள சாமானிய விப்பிரர்க்கு என்ன யோக்யதையுண்டாம்?**

ஆதிசைவருள்ளும் சிவபெருமானால் உண்டாகிய தீக்ஷாநந்தரமே அன்றோ பூஜார்ஹத்வம்வெளிப்பட்டது? இங்ஙனம் அறியாத பேதையர் சில கோயில்களில் சைவதீக்ஷா ஹீனராகவே யிருந்துகொண்டு பூஜிக்கின்றனர். ஆகையால் அவரையே மேல்காட்டிய வசனம் பாதிக்குமென்க.

இவ்வுண்மை,

"பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றனை அர்ச்சித்தாற்,
போர் கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்,
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமா மென்றே,
யேர்கொண்ட நந்தியெனக் குரைத்தானே"

என்னுந் திருமந்திரத்தானும் வெளிப்படுமென்க.

தம்மோடொத்தவதீக்ஷிதர்களையே நிந்தைகூறும் இவ்வாகம வசனத்தை அப்பண்டித சிரோமணியார் ஆதரித்தது. அவரையே தெருவில் விட்டதென்க.

இது நிற்க,

க்ஷிநொதிவஶாஸ்தாணி க்ஷுநொநாசாஸயதூஸள

ஸ்யஶாசாஸதெயஸ்தாத்த ஸ்தாஊசாயபூஸ்ஷுஹூதெ

என்னும் வாக்கியத்துக்குச் சாஸ்திரங்களை ஆராய்ந்து தாமும் ஆசரித்து, அந்நியர்களையும் ஆசரிக்கச்செய்யுமவர்கள் ஆசாரியர் களென்று சொல்லப்படுவர் என்றுபொருள்கூறி, இதற்கு மேல் சாஸ்திரம் என்றால் வேதமெனவும், அதனால் சாஸ்திர ஆரணஞ் செய்தல் என்பது பிராம்ஹண ஜாதியிற்பிறந்து காலத்தில் உபநயநம், வேதாத்யயனம், வேதாந்த விசாரணைகளை அடைந்து அவற்றுள் பெறப்படும் கன்மங்களைச் செய்து பரமேசுவர அர்ப்பணம் செய்தன் முதலியனவே எனவும் வியாக்கியானஞ் செய்து கொண்டனர்.

இப்படிப் பொருள் விரித்ததால் வேதாதிகாரம் இல்லாதவர்க்கு ஆசாரியத்வம் சித்திக்காமையால், வேதத்தில் அநதிகாரிகளாகிய சூத்திராதியர்க்கு ஆசாரியத்வம் இல்லை என்பது மாத்திரம் பெறப்படுமே அன்றி சிவப்பிராம்ஹணாளை மறுப்பதற்கு உண்டாகிய சாதகம் யாது?

நிசுவாசாகமத்தில்,

ஜாநபாத பரிஜ்ஞாத ஷடங்க ஶ்ருதிவிஸ்தர:
க்ரியாபாதேஷு குஶல: விஶ்ராபாதாயுபோதக:
யோகபாத க்ருதாப்யாஸ: சர்யாபாதாநுவர்த்தக:
ஶிவஶாஸ்த்ர பரோக்ஷஜ்ஞ: ஶிவபூஜாக்னி தத்பர:

என்னும் வசனத்தால் நாலுவேதம் ஆறு அங்கங்களை யறிந்தவராயும், ஞானபாதங்களை நன்கு போதிப்பவராயும், கிரியா பாதத்தில் சமர்த்தராயும், யோகபாதத்தில் அப்பியாச முள்ளவராயும், சரியாபாதப்பிரகாரம் நடத்தை உள்ளவராயும், சிவசாஸ்திரமாகிய சிவாகமத்தில் விசேஷ பரிச்சயம் உள்ளவராயும் சிவபூஜை சிவாக்னி இவைகளைத் தப்பாமல் நடத்துகின்றவராயும் உள்ளவரே ஆசாரியராவர் என்று பெறப்பட்டது.

இன்னலட்சணங்கள் ஆதிசைவரிடத்தன்றி அந்யத்ராகி ரகிப்பதுகூடாது. தீக்ஷையில்லாத சமானியவிப்பிரர் முதலினோர் இதில் ஆசை வைப்பது செரிக்காதாகையால் இவ்வுண்மை அறியால் அதீக்ஷிதர்க்கும் ஆசாரியத்வம் உண்டென்று சொப்பனங் காண்பதும், மேல்சாஸ்திரம் என்பதற்கு வேறுபப்பொருள் கூறித் தமக்கு ஆசாரியத்வம் சமர்த்தித்துக் கொள்வதும் செல்லாது.

தீக்ஷையில்லாத சாமானிய விப்பிரனுக்கும், தீக்ஷையில்லாத சூத்திரனுக்கும் சைவசித்தியில்லாமையால் இருவருஞ்சமானரே ஆயினர்.

மண்பாண்டத்தோடு ஒத்த வேதத்தில் சூத்திரருக்கு அதிகாரம் இல்லாவிடினும் பொன்பாண்டமனைய சிவாகமத்தில் சர்வத்திராவதிகாரம் உண்டானதன்மையால் ஆதிசைவர்முதல் எல்லாச்சாதியருந் தத்தஞ்சாதியிலுந் தமக்குக் கீழிட்ட சாதியிலும் ஆசாரியத்வம் வகிக்க உரியராவரென்பது நிச்சயம்.

இதனால், சாஸ்திரமென்றால்வேதம் என்று விபரீதப் பொருள் கொண்டது பிழையாகிச் சிவாகமநூல் என்றே மேதாவியர்பொருள் கூறுவர். அன்றியும், சாஸ்திரமென்பது வேதம், சிவாகமம், புராண முதலிய எல்லாநூலுக்கும் பொதுவானேயமையும் பெயராகவும் பண்டிதர் கூறாநிற்பர்.

இன்னும் சிவாகமம் வேதமென்னும் பெயர் தாங்கல் உண்மையால் சிவாகம அப்யாசஞ் செய்பவர் எல்லாமும் வேதாப்யாசிகளென்றுஞ் சொல்லுப்படுவர். இவ்வுண்மையை யறியாமல் சாஸ்திரம் சாமானிய விப்பிரனுக்கே யுண்டென்று கூற வந்தது சண்டமாருதத்திற்பட்ட பஞ்சாயிற்றெனவறிக. சூத்திரர்க்கும் ஆசாரியத்வம் உண்டென்று கூறும் வாக்கியங்களைப் பின்னர் எழுதுவாம்.

மேல் விசாரித்துத் தெளிவுபெறக்காட்டிய நியாயங்களால் சாமானியவிப்பிரரிடம் ஆசாரியத்வம் சித்திக்காமை வெளிப் பட்டதால் சதாசாரியர்களாயுள்ள பேர் இவரென்பதைப் பிரமாண பூர்வகமாய்க் கண்டு விவகரிப்பாம்.

காரணாகமத்தில்,

ஶிவேந ஸ்தாபிதஶ்சைவ ஶைவேந ஸ்தாபிதஶ்ஶிவ:
ஶிவஶைவவிஶுத்தாத்மா ஸஶிவப்ராஹ்மணோத்தம:

என்னும் வசனத்தால் சிவாகமம் சிவபெருமானால் தாபிக்கப் பட்டது. சிவபெருமான் சிவாகமத்தால் தாபிக்கப்பட்டனர். **சிவபெருமா னாலுஞ் சிவாகமத்தாலுஞ் சுத்தாத்மாக்களாயுள்ள**

சிவப் பிராம்ஹணர் என்னுஞ் சைவாசாரியர் தாபிக்கப் பட்டனர் என்று பெறப்பட்டது. இந்த வாக்கியத்தால் ஆசாரியர் இன்னாராதல் வேண்டுமென்பது வெளிப்பட்டது.

இவ்வுண்மையுணர்ந்தபோக்கே,

ஸ்ரீஹூண ஷூவ ஜாதீநாம் வெஷாநுமூஹகாஃவிதாஃ

என்னும் சிவாகமவசனத்தில் உண்மைப் பொருள் விளங்கு மென்க.

இந்த வாக்கியத்தில் சாமானிய விப்பிரனைக் கிரகித்து அவன் றனது வைதிகபத்ததியின்படியே வுபநயனாநந்தரம் சப்தகோடி. மஹாமந்திர அப்யாசியாகிப் பின்னே அக்நிஷ்டோமாதி யாகங்களில் அத்வர்யுவாயிருந்து எஜமானனை மந்திர தீக்ஷை பண்ணுவதற்கு யோக்யனாகிறான் என்று கொண்டதனால் சிவாகமத்திற் பெறப்படுஞ் சமயாதிதீக்ஷைகளைச் செய்யும் அதிகாரம் பெறுதலுக்கு உண்டாகிய சாதகம்யாது? வைதிகாசாரியா உள்ளவன் தன்னாசாரத்தைப் பிறனுக்குச் செய்வதில் சிவாகமம் விரோதியா தென்க.

அன்றியும், சிவப்பிராம்ஹணர் எப்படித் தமக்குக் கீழிட்ட விப்பிரன் முதலியசாதிகளில் தீக்ஷா அநுக்கிரகஞ் செய்யவதிகாரம் பெற்றிருக்கின்றனரோ அப்படியே விப்பிரருஞ் சிவதீக்ஷாநந்தரம் தம்மிற் தாழ்ந்த ஜாதியார்க்குங், தமது ஜாதியார்க்கும் ஆசாரியராவதில் தாழ்வில்லை ஆகையால் அவரிடமும் மேல்வாக்கியம் பிரயோஜனப் படுமென்க.

சந்தான சம்ஹிதையில்,

ஆஉளஸஉாமிவெவெவ தீக்ஷிதாஷூா ஆஉிவெரகாஃ
ஆஉிவெரவாஷூதெஙாயா ஸவூாநுமூஹகாஃஷூதாஃ

என்னும் வசனத்தால் ஆதிகாலத்தில் சதாசிவ மூர்த்தியால் தீக்ஷை செய்யப்பட்டவர்கள் ஆதிசைவரெனவும், அவர்கள் சகல வர்நத்தாருக்கும் தீக்ஷாநுக்கிரகஞ் செய்ய வதிகாரம் பெற்றவராவரெனவும் பெறப்பட்டது. இதில் சாமானியவிப் பிரனும் அடங்கலால் இதற்குமுன் கூறிய சிவாகம வசனமும் இக்கருத்திலே தானே பரிவசாணம் பெறுமென்க. (சர்வாநுக் ரஹகா:)

என்பது விப்பிரர் நீங்கலான மற்றைச் சாதியாரையே பற்றுமெனக் கூறுவரேல் அவர்க்குச் சமாதானங் கூறுவோம்.

ஊர்த்வவக்த்ராத்ஸமுத்பந்நா ஆதிசைவாஸ்ஸமீரிதா:
விப்ராஸ்தேஷாம் து பூஜ்யா: ஸ்யுர்நாந்யதா ப்ராக்ஞயாம்பர

என்னும் சுவாயம்புவ வசனத்தால் சிவபெருமானுடைய ஊர்த்துவ முகத்தில் பிறந்தவர் ஆதிசைவர்கள், அவர்களுக்குப் பக்தராயுள்ள விப்பிரர் பூஜிக்கப்படுவர், அல்லாத பேர் பூஜ்யராய்ப் பவிப்பர் என்று பெறப்பட்டது. இதில் விப்பிரனைத் தனியே கூறி சிவப்பிராம்மணனிடத்தில் அநுக்ரஹத்தை அடையும் பக்தனாக விதந்திருத்தலால் ஆதிசைவரிடத்தில் விப்பிரனுக்குச் சிஷ்யத்வம் உண்டாகாது என்னும் குத்ஸிதவாதம் நசித்ததெனவறிக.

இவ்வுண்மைகளையறியும் புண்ணியமின்றித் தமக்குபயுக்த மல்லாத பிரமாணங்களில் எல்லாந்தலையிட்டுக் கொண்டு அவர் விழிப்பது என்னையோ அறியோம்.

சைவாஸ்ஸப்தவிதா ப்ரோக்தா: தேஷாம் பேதம் ச்ருணுஷ்வ ய
அநாதிசைவ: ப்ரதம: ஆதிசைவோ த்விதீயக:
த்ருதீயஸ்து மஹாசைவ சதுர்த்தோ(அ)நுசைவக:
பஞ்சமோ(அ)வாந்தரச்சைவ: ஷஷ்ட: ப்ரவரஸம்ஜ்ஞக:
ஸப்தமோ(அ)ந்த்யசைவஸ்து சைவாநாம் பேதயாரித:
ஸப்தமோ(அ)ந்த்யசைவஸ்து சைவாநாம் பேதயாரித:
அநாதிசைவஸ்ஸிவ: ஆதிசைவஸ்ஸிவத்விஜ:
விப்ராஸ்ததைவ மஹாசைவா: க்ஷத்ரியோ வைச்ய ஏவ ச
அநுசைவஸ்ஸமாக்யாத: ஸச்சூத்ராஸ்ததாவாந்தராஸ்ஸ்மிருதா:
ஸவர்ணம் பஞ்சஸம்யுக்தா: ப்ரவராஸ்ஸ்ம்ருதா:
மாத்ருகாஞ்ச ஸம்பேதா: அந்த்யசைவஸமாக்யதே
ஏதேஷாம்ஜாதயோ யாஸ்து அந்த்யசைவாஸ்ததாஸ்ம்ருதா:

என்னும் வீரதந்திர வசனத்தால் சைவர் ஏழு பிரிவினராவர் எனவும், அவருள், முதல் அநாதிசைவரெனவும், இரண்டாவது ஆதிசைவரெனவும், மூன்றாவது மஹாசைவரெனவும், நாலாவது அநுசைவரெனவும், ஐந்தாவது அவாந்தரசைவரெனவும், ஆறாவது பிரவரசைவரெனவும், ஏழாவது அந்த்யசைவர் எனவும் சொல்லப்

படுவர் எனவும் அவர்களில், அநாதிசைவர் சிவபெருமானும், ஆதிசைவர் சிவத்விஜரும், மஹாசைவர் பிராம்ஹணரும், அநுசைவர் க்ஷத்திரியர் வைசியரும், அவாந்தரசைவர் சூத்திரரும், சவர்னஅம்பஷ்ட மத்யஸ்த குலாலர்கள் பிரவரசைவரும், அந்ய ஜாதியார் அந்யசைவரும் ஆவரெனவும் பெறப்பட்டது.

இந்த வாக்கியத்தில் முதலிரண்டாவது மூன்றாவ தென்னும் இலக்கங்களிட்டு வரிசைக்கிரமத்தைச் சொல்லுகை யால் இதிற் சொல்லப்பட்டவர் முறையேயொருவரில் ஒருவர் தாழ்ந்தவர் என்பது சொல்லாமே அமையும்.

அநாதிசைவருக்கு ஆதிசைவர் தாழ்ந்தபடியே ஆதிசைவருக்கு மஹாசைவர் தாழ்ந்தவராதல் வெளிப்பட்டது அறியாது தீக்ஷா ஹீனத்தினால் அந்யசைவரினுங் கடையாய சாமானியவிப்பிரர் ஆதிசைவரிற் தாமுயர்ந்தவராகச் சொப்பனங்கண்டு இந்த வாக்கியத்தைத் தமக்கு உபகாரமாக எடுத்தாள்வதில் உண்டாகிய பயன்யாது?

ஒக்ஷாயூாயொ ஶாஸ்ரெஷ்டீ: ஹூகிஸுகி ஸஜைஷு:
ஃஜுஃண தயயூக்ஷு: த ஜாஃக்ஷொஃஜொஹவெஃ
க்ஷுரயொஶ க்ஷூாஉயுாஸஂயொஶாஉா யெக்ஷுய:
ஸவெ ஞூஉாயுயகூக்ஷு: ஸவுஶுஃகஹிகாயவெ

என்னும் வசனத்தால் சிவாகமத்தில் இலட்சங்கிரந்தம் அத்யயனஞ் செய்தவன் குருச்சிரேஷ்டனாவன் எனவும், அவன் புக்தி முக்தி பலன்களைக் கொடுப்பான் எனவும், அதிற்பாதி அத்யயனம் பண்ணினவன் மத்திம குருவெனவும், அதிற்பாதி அத்யயனம் பண்ணினவன் அதமகுருவெனவும், ஆகையால் ஞான யோகக் கிரியையாதிகளை உடையவனே ஆசாரியனாவன் எனவும், அவனே சகலபிராணி கோடிகளுக்கும் ஹிதத்தைச் செய்கின்றவன் எனவும் பெறப்பட்டது. இந்த வசனத்தாற் பெறப்பட்ட சாதகம் சைவாசாரியர்க்கே சர்வ சம்பிரதி பன்னமாக இதனையும் அதீக்ஷிதவிப்பிரர் தமக்குப காரமாக யோசித்தல் சர்வாசங்கதமாம்.

இவ்வுண்மைக் கருத்தே, "ஞானயோகக் கிரியை சரியை நாலுநாதன்றண்பணி ஞானிநாலினுக்குமுரியன்" என்று சிவஞான சித்தியாரிலும் வெளிப்பட்டவாறறிக.

இப்படி யந்ய சாதகமான பிரமாணங்களில் எல்லாம் வந்து வீழ்ந்து விளக்கில் விழுந்து மாயும் விட்டிற்பூச்சியென்னத் தாழ்வு தேடிக் கொள்வதென்னை?

கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசையா? சைவத்துக்கும் ஆசை அசைவத்துக்கும் ஆசையென்றால் எப்படிக் கூடும்?

சைவராக வேண்டின், சிவதீக்ஷையால் அன்றி அது சித்தியாமையால் அச்சிவதீக்ஷா அநுக்ரஹ அதிகாரிகளாகிய சிவாசாரியர் மகிமைகளை இன்னும் பிரசவனிப்பாம்.

காமிகஆகமத்தில்,

ஸ்ருஷ்ட்வா நகாரகாயேய தீக்ஷிதா: கௌசிகாதய:

ஸிவேநதக்ஷோத்தரஸ்யாஃஸைவாஸ்தாம்தாநிகாத்விஜ:

என்னும் வசனத்தால் **சிவபெருமானால் கௌசிகர் முதலிய மஹரிஷிகள்** சிருட்டிக்கப்பட்ட வநந்தரம் அவரால் தீக்ஷை செய்யப்பட்டார்கள். அவர்கள் குலத்தில் உண்டானவர்கள் சந்தானகிரமத்தில் வந்த ஆதிசைவர் என்னப்படுவர் என்று பெறப் பட்டது. இந்தவசனத்தால் ஆதிசைவர் உற்பத்தியும், அவர் யாரால் தீக்ஷிக்கப்பட்டார் என்பதும் வெளிப்பட்டது. மேல் கௌசிகாதிகள் என்று சொன்னவிவரணத்தைப் பின் வசனத்தால் விளக்குவாம்.

கௌஸிக காஸ்யபஸ்சைவ பாரத்வாஜோகௌதமஸ்ச

அகஸ்தியஸ்சைவ பஞ்சைதே பஞ்சவக்த்ரேண தீக்ஷிதா:

தேஷாம்கோத்ரே ஸமுத்பூதா: ஆதிஸைவா ப்ரகீர்த்திதா:

என்னும் வசனத்தால் **கௌசிகர், காசிபர், பரத்வாஜர், அகஸ்தியர், கௌதமர்** என்னும் பஞ்சரிஷிகள் சதாசிவமூர்த்தியினது பஞ்ச முகங்களால் தீக்ஷிக்கப்பட்டார்கள் எனவும், அவர்கள் குலத்தில் வந்தவர்களே ஆதிசைவர் எனவும் பெறப்பட்டது.

இவ்விரண்டு வசனங்களாலும் **சிவசம்ஸ்காரம் உடையராந் தன்மை ஆதிசைவரிடத்தில் ஜந்மத்திலேதானே யோசிக்கப் படுகையால்** சம்ஸ்கார வர்ஜிதாளாயுள்ள சாமானியபிராம்ஹணர்

அப்பரமைக நிஷ்டாளாயுள்ள சிவத்விஜருக்கு முன்தாமுயர்ந்தவர் என்றெப்படித் தலைநீட்டக்கூடும்? இவ்வாசாரியமூர்த்திகள் சர்வாநுக்ரஹத்வம் பெற்றவரென்பது தோன்ற மடபதிகளாக வர்த்தித்தார் என்பதை ஈண்டுப் பிரவசனிப்பாம்.

> தஸ்மாச்சதுர்ஷு காஷ்டாஸு ஸ்தாபிதாஸ்சதுரோ மடா:
> ஆமர்த்தகீ கோளகீதி ததா புஷ்பகிரிஸ்திச
> ரணபத்ரஞ்ச சத்வார: ஸந்தாநஸ்ய நாயகா:

என்னும் வசனத்தால் மந்தானகாளீசம் என்னும் க்ஷேத்திரத்தில் நான்கு திக்குகளிலும் ஆமர்த்தகி, கோளகி, புஷ்பகிரி, ரணபத்திரம் என்னும் பெயர்களால் பிரகாசிக்கும் நாலுமடங்களுக்கும் நாயகர்களாக ஆதிசைவர்கள் எழுந்தருளி யிருக்கின்றனர் என்று பெறப்பட்டது.

இப்படி ஜகதாசாரிய மூர்த்திகளாய் விளங்கும் ஸத்பிராம்ஹண சீலராகிய ஆதிசைவர் மகிமையை ஸ்காந்தம், சங்கர ஸம்ஹீதை, உபதேசகாண்டத்தில் கூறியபடியும் ஈண்டுப் பிரகடனஞ் செய்வாம்.

ஓரரசனது குமாரர் நால்வர் விவாகஞ் செய்துகொண்டு தங்கள் ஊருக்குச் சமீபத்தில் வரும்போது, மார்க்கத்தில் விசுவாமித்திரர் சாபத்தால் கண்ணிழந்தவராகி வருந்திநின்றனர். அப்போது அகஸ்தியபகவான் அவர்களுக்கு முன்றோன்றுதலும் அவர் பாதங்களில் வணங்கித் தங்களுக்கு நேரிட்ட குறையை அவ்வரசபுத்திரர் விண்ணப்பஞ்செய்து கொண்டனர். அதற்கு அகஸ்தியபகவான் அவர்களைப் பார்த்து எதிரில் வந்து கொண்டிருக்கிற ஒருபிராம்ஹணரைச் சுட்டி இதோ வருகின்றவர் அமிர்தேசுவரரைப் பூசிக்கும் ஆதிசைவர், இவரால் உங்களுக்கு உண்டாகிய குறைநிவிர்த்திபெறுமென்று சொல்லிவிட்டு அந்த ஆதிசைவ பிராம்ஹணரைப் பார்த்து விண்ணப்பஞ் செய்கின்றார்.

> [illegible]
> [illegible]
> [illegible]
> [illegible]
> [illegible]
> [illegible]

என்னும் வசனத்தால் தேவரீர் லோககுருவாயுள்ளவர், புஷ்பகிரி சந்தானத்தில் எழுந்தருளியவர், மஹானாயுள்ளவர், துக்கத்தை அடைந்திருக்கின்ற இவர்களைச் சிஷ்யர்களாக அங்கீகரித்தருளல் வேண்டும், சகல பாபங்களையும் நிவிர்த்திசெய்கின்ற தேவரீரால் ஆராதிக்கப் படுகின்ற அமிர்தேசுவரரைச் சேவிக்கச் செய்து பரிசாரகம் புரியும்படி அங்கீகரித்தருள்வீராக, எப்போது இவர்கள் துக்க சாகரத்தினின்றும் விடுபடுவார்களோ அதுபரியந்தம் அவர்களிடம் கருணை புரிந்தருள்வீராக, தேவரீர் லோககுரு வாகையால் இதுசெய்தருளல் உம்முடைய கடைமையாம் என்று கூறினதாகப் பெறப்பட்டது.

இப்படி இன்னும் அநந்த பிரமாணங்களால் தாபிக்கப்படற் பாலதாகும் யோக்யதா விசிஷ்டம்வகிக்கும் ஆதிசைவரைச் சாமானிய பிராம்ஹணர் பழிகூறுவது குருவுக்கு நாமம் போடமுயலுங் குண்டகராதலையே காட்டுமென்க.

இவ்வுண்மையில் அசூசைமேலிட்டபேர் சிவத்விஜரையே குண்டகர் கோளகர்களாகக் கூறித் திரிவர். எங்ஙனமெனின், பிராம்ஹணனுக்கும், கன்னிகழியாத பிராம்ஹணனுக்கும், கன்னிகழியாத பிராம்ஹணப்பெண்ணுக்கும் பிறந்தவரே சிவத் விஜரெனவும், கன்னிகைவயிற்றிற் பிறந்த காரணம்பற்றியே அவரை நூல்கள் கானீனர், அல்லது கன்னி ஜாதரென்னும் பேரால் நிஷித்தங்கூறுமெனவும் புலம்புவதேயாம்.

இப்படிப் பழித்துத் திரியும் பார்ப்பனக் கூட்டத்தாரை யோசிக்கில் சக்கிலியர், வண்ணார், பறையர் முதலினோர் குலத்திலும், கழுதை, நாய், நரி, மான், குருவி முதலிய பசுபட்சிகள் வயிற்றிலும் உதித்தவராகவே சில நூல்கள் கூறுவதால் இதைப் பரிகரித்துக் கொண்டாலன்றோ அவரேற்றுஞ் சைவாசாரிய தூஷணம் யோசிக்கற் பாலதாம்?

இன்னும் சிவத்விஜர் வீட்டில் யாம் ஜலமும் பரிசியோம் ஆகையால் அவரெம்மில் உயர்வதெப்படி எனச் சில மூர்க்கப் பிணங்கள் விஸ்தாரம் பேசும். இது கம்மாளருங் கன்னிடையரும் விப்பிரர் மனையிற் சலபானஞ் செய்யாமைகொண்டு தம்மை அவரினும் மிக்காரென இறுமாந்துரைத்தல் போல்வதேயாம்.

வைசியராகிய செட்டிகண்மனையிலும், விசுவகுலதிலகராகிய கம்மாளர் மனையிலுந், தாழ்மக்களாகிய வண்ணார், அம்பஷ்டர் முதலினோர் அன்னபானாதிகளை யங்கீகரிக்கப்பதில்லை யென்னும் வழக்குப்பேசி வண்ணார் முதலினோரையே உயர் குலத்தவராகக் கொள்வதுமன்றோ இதற்கு நிதரிசனமாம்? இப்படிப் பலவுள அவற்றை விரிவஞ்சிவிடுத்தாம்.

தீக்ஷை வகித்தவராகிய சூத்திரர்களே சாமானிய பிராம்ஹணர் வீட்டில் ஜலபானஞ்செய்யாராயின், ஜந்மத்தினாலேயே சமஸ்காரபராளாய் விளங்கும் ஆதிசைவர் மேற்படி சாமானிய விப்பிரர்களை யெவ்வளவின் மதிப்பர்?

இதையறியாது சாமானிய பிராம்ஹணர் சிவத்விஜருடன் அன்னபானாதிகளைக் கிரகியார் என்பதென்ன மடமை?

சஜாதியும், சகோத்திரமும் வகித்தவராகிய ஸ்மார்த்தரும், வைஷ்ணவ பிராம்ஹணரும் ஒருவர் வீட்டில் ஒருவர் உண்ணுதலும், பருகுதலுஞ் செய்யாமல் ஒருவரை யொருவர் தாழ்வு கூறுவ தென்னை? இன்னசூக்கும விசாரஞ் செய்த பேர்க்கன்றி யுண்மை விளங்காதென்க.

இனிச்சூத்திரர்க்கு ஆசாரியத்வம் உண்டெனஒருபிரமாணமுங் காணவில்லையென்று பித்தந்தலைக்கேறிப் பேசும் பீடைச் சொல்லையும் பெயர்த்தெறிவாம்.

சுப்பிரபேதத்தில்,

ஷூாஹணஃ க்ஷத்ரியாவெஶ்யாஃ ஶூ²த்ராஃ ஶு²த்³த⁴குலொத்³ப⁴வாஃ
ஆசார்யா ஸ்யு꞉ விஜ்ஞேயா நான்யேஷாம்ஸ்து கதா³சந

என்னும் வசனத்தால் பிராம்ஹணரும், க்ஷத்திரியரும், வைசியரும், சுத்த குலத்தில் பிறந்த சூத்திரருமாகிய நால்வருமே ஆசாரியராவர், மற்றையோர்க்கு ஒருக்காலும் ஆசாரியத்வம் இல்லையாம் என்று பெறப்பட்டது.

இந்த வாக்கியத்தால் கண்டோக்தியாய்ச் சூத்திரனை வெறுமனே ஆசாரியனென்று கூறாமல் சுத்தகுலத்திற் பிறந்தவ னென்றும் புகழ்ந்திருக்கும் நுட்பத்தை யோசியாமல் சூத்திரனுக்கு ஆசாரியத்வம் இல்லையென்று கூறுவதென்ன பேதமை?

இப்படியொரு வாக்கியமேயன்றி அநந்தவாக்கியங்கள் உண்டாயிருக்கும் உண்மையை யொருபோதுங் கண்டுங்கேட்டும் இராத கொடுமையே அன்றோ சூத்திரர்க்கு ஆசாரியத்வம் உண்டெனக் கதாசித்தாய் உரைத்தவிடத்தில் அதை உபசார மாத்திரமாகவே கொள்ளவேண்டுமெனக் கூசாது உரைத்தனர்?

இப்படியே மஹாசைவரிடமுங் கெண்டாலென்னை? பிறரைத் தூஷித்தலால் தம்மாதிக்யமும் வியபிசரிக்குமென்பது அறியாது சமாதானங் கூறவந்தது தடுமாறிப் போயிற்றென்க.

மஹா சைவர்க்கே தோஷமுண்டாம் எனின், அசைவசித்தியே பிராப்தமாகப் பெற்றுள்ள சாமானிய விப்பிரரை யெம்மட்டில் நாமங்கீகரித்து உறவாடவல்லேம்? இதனால், தாம் சாதிக்கப் புகுந்த விஷயத்தைப் பிரமாணவாயிலாக நாட்டுவதேயுக்தமாம். என்பது, சூத்திரர்க்கு ஆசாரியத்வம் இல்லையென்னும் வாக்கியங் களை உதகரித்துக் காட்டவேண்டியம் என்பதேயாம்.

இதைவிட்டுச் சாஸ்திரமென்றால் வேதமெனவும், வேதம் சூத்திரனுக்கு யோக்யமல்லாமையால் பிராம்ஹணனே வேதமாகிய சாத்திரத்தையாசரிக்கும் ஆசாரியனாவன் எனவும் கூறித் தாமாசரிப்பது போற் பிறரையும் ஆசரிக்கச் செய்யவருங்கால் வேதத் துக்கு அதிகாரிகளாகாத சூத்திரர்க்கு அவ்வேதத்தை யுபகரிக்கக் கூடாதபோது அச்சூத்திரரிடத்தில் தமக்கு ஆசாரியத்வம் எப்படிச் சித்திக்கும் என்பதை யோசியாது வீண்குழப்பு வார்த்தையாடுவ தெல்லாம் விருதாகோஷமென்க.

இது நிற்க, மேல்காட்டிய வசனமேயன்றி யின்னுஞ் சில வசனங்களையும் யாமீண்டுதகரித்துக் காட்டுவாம். சைவ புராணத்தில்,

ஶிவஶாஸ்த்ர ஸமாயுக்தா: பஶுஶாஸ்த்ர பராங்முகா:
ப்ராஹ்மணா க்ஷத்ரியா வைஶ்யா: ஶூத்ராஶ்சாசார்ய ஸம்ஜ்ஞிதா:

என்னும் வசனத்தால் பசுசாத்திரம் பற்றாதுவிட்டுச் சிவசாத்திரம் பற்றிப் பயிலும் பிராம்ஹணர் முதலிய நான்குவருணத்தாருமே ஆசாரியராவர் என்று புகழப்படுவர் என்று பெறப்பட்டது. இந்த வாக்கியத்தால் பிராம்ஹணனேயாயினும் பசுசாத்திரம்பற்றி வாழ்பவனாயின் அவன் ஆசாரியன் ஆகானென்று கூறிய

விசேஷத்தால், பசுவாகிய ஆத்மாவையே பதியாகிய பிரம்ஹ மெனக்கொண்டு அஹம்பிரம்ஹம் எனக்குழறித்திரியும் அப்பேதை யர்க்குச் சைவாசாரியத்வம் எப்படியுண்டாமென்பது யோசிக்க வேண்டிய தல்லவா?

ஒருவிதத்தானுந் தாமே சைவாசாரியத்வமெய்தும் யோக்கியர் அல்லாததை மறைத்துச் சிவஞானச் செல்வராய் விளங்கும் பிறரிடமேற்ற முயலுந்தூஷணமேறாது! ஏறாது!!

இன்னும் கந்தகாலோத்தரத்தில்,

ஊாஷாணா ஶ்ஸ்லிவ ஸஂஸ்லாராக் ஶுக்தி ஶுக்தி ஒுஜொ ஐவெக
ஊாஷாணா ஶ்ஸ்லிவதாஂயாதி ஶூஜஸ்லூ நகயஂஐவெக

என்னும் வசனத்தால் கல்லானது சிவசமஸ்காரத்தினாலன்றோ போக மோக்ஷங்களைத் தருவதாம். கல்லானது சிவத்தன்மை அடையுமா கில் சூத்திரன் அங்ஙனமாகான் என்பது எங்ஙனம் என்று பெறப்பட்டது. இந்த வசனத்தால் சூத்திரன் ஆசாரியனாகான் என்னும் அஹங்காரவாதம் நசித்ததெனவறிக.

பிராம்ஹணனேயாயினும் பதிசாத்திரமாகிய சிவாகமங் களைத் தொடுவதற்கேனும் சிவதீக்ஷை இன்றியமையாதென்னும் உண்மையறியாது தீக்ஷாஹீனராய் யிருந்துகொண்டே சிவாகமத்தில் எமக்கு அதிகாரம் உண்டென்று குழறிவழியுஞ் சாமானிய விப்பிரர் தாம் சைவாசாரியராக வேண்டிமுயலும் யோக்கியமே! யோக்கியம்!!

சுப்பிரபேதத்தில்,

ஶூலஶைவஂ ஶஷஂதஞஂ நஷெயஂ நஒுகாஶயெக
தீக்ஷிதஸ்ய ஶுசீரஸ்ய ஶிவஹக்தி ஒாரஸ்யச
ஶ்ராவணீயஂ நசாநூஷ் கஉநஂஷி ஒுஶஸ்யதெ

என்னும் வசனத்தால் இந்தச்சுத்த சைவாகமம் எல்லாருக்குங் கொடுக்கத் தக்கது மன்று, விளக்கத்தக்கதுமன்று; தீக்ஷைபெற்ற வனாய், நிலையுடையோனாய், சிவபக்திமானாய் இருப்பவனுக்கே விளக்கத் தக்கது. ஏனையோர்க்கு விளக்கல் குற்றமாம் என்று பெறப்பட்டது.

இந்த வாக்கியத்தால் சிவாகம சித்தாந்தத்தின் பெருமையும், அதைப்பெறுவான் றன்மையும் வெளிப்பட்டதனால் இன்ன தன்மைகளிலொருசற்றும் எய்தப் பெறாமல் அந்தோ சாமானிய விப்பிரருஞ் சிவாகமத்தில் தலையிட்டுக்கொண்டு அதைக் கெடுக்கப் பார்க்கின்றனரே!

இனிப்பாஞ்சராத்திரியும் சைவா சாரியத்வம் வகிக்கவருமே! விவிலிய நூலை யவலம்பித்துக் கேடுண்ட ஜாதிப் பிரஷ்டனாகிய பிராம்ஹணனும் ஏன்றனக்குஞ் சைவாசாரியத்வம் உண்டென வெளி வராமற் போவான்? இப்படி ஆபாசங்களையே நவநவமாய் உண்டு பண்ணுதற்கிடமாகச் சாமானியவிப்பிரர் சிவாசாரியத்வம் தாமும் வகிக்கமுயலுதல் தலையெடுக்காமல் நசுக்கப்பட்டதெனவறிக. (நவ நவமாய்-புதிதுபுதிதாய்)

மேல்செய்துமுடித்த தீர்க்கபிரவசனத்தால், ஸ்வேஸ்வே கர்மண்யபிரத:

என்கிற கீதாவசனப்படித் தத்தம் சுவதர்மங்களில் அவரவரும் நிற்பதே சால்புடைத்தாம்; என்றதனால் சாமானிய பிராம்ஹணர் தமக்குள்ள ஸ்மிருதி ஆசாரங்களைத் தழுவிக் கொண்டு அவற்றையே பிறர்க்கு உபதேசித்து, அதனால் ஆசாரியத்வம் வகிப்பதில் யாதோராடங்கமு மசங்கதமுமின்றென வறிக.

ஒவ்வொரு ஆசாரமும் அந்தந்தவளவில் அதுவதுவே சிரேஷ்டமென்று சொல்லுவதற்கிசைய ஸ்மார்த்தாசாரம் சைவ முதலிய ஆசாரங்களினும் மிகவுயர்ந்ததெனவும், சைவாசாரத்தை உடையாராகிய ஆதிசைவர் தம்மிற் றாழ்ந்தவர் எனவும் வாய் கூசாதுரைப்பதில் எமக்குயாதொரு சங்கடமும் இன்றென்க.

இப்படி ஒவ்வோர் ஆசாரகனுங் கூறிவருந் தன்மையுண்மையால் இப்படி ஒவ்வொருவருங் கூறுங்கால் அவரவரும் அவற்றை விசாரிக்கவரும் பிரமேயத்தில் உண்மை உண்மையாகவே முடியுமாகையால் எப்படி நிகழ்ந்த பிரஸ்தாபம் ஒன்றையீண்டு விவகரித்துக் காட்டுவாம்.

ஓர்கால் சைவரொருவரும் போலி ஸ்மார்த்தர் ஒருவரும் ஓரிடத்தில் சந்தித்தனர். அப்போது அவ்விருவருக்குஞ் சில சம்பாஷணை நடந்தது. அதுவருமாறு:

ஸ்மார்த்தர் :- எங்களுக்குள்ளபடியே சிவத்விஜருக்கும் அத்திரி, பாரத்வாஜ காசிப கோத்திரங்கள் உண்டாயிருக்கையால், அவரையும் எம்மோடு சமானராகக் கூறாமல் அவர் சிவமுகோத்பவராய் உள்ளவரென விசேடம் பாராட்டுவதென்னை?

சைவர்:- நும்மோடு அவரைச்சஜாதி கோத்திரங்கள் உடையாரென நீவிர்கொண்டக்கால் அவரை நும்மிற் றாழ்ந்தவராக நீவிர் கூறிவருவதென்னை?

ஸ்மார்த்தர் :- இதற்கு விடையாம் பின்னே கூறுவாம், யாம் கேட்ட கேள்விக்குப் பதிலென்னை?

சைவர்:- நும்ம விடையிலேதானே யெம்மவுத்தரந் தொக்கி நிற்கையால் அதனை நீவிர் கூறாவிடினும் நுஞ்சமய வழக்கின் படியாமே விரித்துப்பின்னர்ச் சமாதானங்கூறுவாம். அத்திரி, பாரத்வாஜர் முதலிய மஹாிஷிகள் கோத்திரோத்பவராகிய நும்மைப்போல் சுத்தராகாது, சிவத்விஜர் கானீனராயினர் என்பது கருதியேயன்றோ அவர்க்குநும்மைப்போற் சஜாதி கோத்திரங்கள் அங்கீகரித்துபின்னரும் அவரைத் தாழ்வுகூறுகின்றீர்?

இந்தக் கருத்தால் சிவத்விஜ துஷணங்கொண்டாடும் நீவிர் அதை மறைத்துவிட்டுச் சஜாதிகோத்திரங்களால் ஒத்தவராகிய சிவத்விஜர் எம்மிலுயர்ந்தவராகக் கூறிக்கொள்வ தெப்படியென வீண்ஜாலம் பகர்ந்ததென்னை?

இப்படி நீவிர் கூறிக்கொள்வதேயன்றிச் சிவத்விஜ உத்தமரோடு நீவிரொப்பாருமிக்காரும் ஆகமாட்டீர்! ஆகமாட்டீர்!!

ஸ்மார்த்தர் :- நும்மாதிசைவரோடு யாம் எப்படிச் சமானாதிகத்வம் பெறமாட்டோம்? சற்றே சொல்லும் பார்ப்போம்.

சைவர்:- நும்மகோத்திர மூலகராகிய மஹாிஷிகளில் கௌசிகர் காதிமகாராஜன் இடத்திலும், மாண்டவ்யர் தவளை வயிற்றிலும், கார்க்கேயர் கழுதைவயிற்றிலும், கௌதமர் பசுவினிடத்திலும், பாரத்வாஜர் பாரத்வாஜம் அல்லது கருங் குருமான் என்னும் பட்சி வயிற்றிலும், வசிஷ்டர்வேசிவயிற்றிலும் பிறந்தவரானபோது நீவிர் ஆதிசைவரோடு சமானராவது எப்படி?

ஸ்மார்த்தர்:- எம்மகோத்திர மூலகர்களாகிய கௌதமர், கௌசிகர், காசிபர், பாரத்வாஜர் முதலினோரே ஆதிசைவர்க்கும் மூலபுருஷரானபோது எமக்குவந்த தோஷம் அவர்க்கு மாத்திரம் வராத தென்னை?

சைவர்:- ஆதிசைவர்க்கு மூலகராகிய கௌசிகாதி மஹரிஷிகள் சதாசிவ மூர்த்தியினுடைய பஞ்சவக்திரங்களினின்றும் பிறந்தவராகையால் குருவிவயிற்றிலும், பசுவின் வயிற்றிலும் பிறந்தவராகிய நும்மகோத்திர முனிவர்களில் அவர் வேறாயுள்ளவர் என வுஅறிவீராக. (பஞ்சவக்திரம்-ஐந்துமுகம்)

ஸ்மார்த்தர்:- எமக்குங்கௌசிக கோத்திரம், அவர்க்குங் கௌசிககோத்திரம். எமக்கும் பாரத்வாஜகோத்திரம், அவர்க்கும் பாரத்வாஜகோத்திரம் இத்தியாதிகளாகப் பிரசித்தம் பெற்றிருப் பதற்கு மாறாய், ஒரேபேரையுடைய இரண்டிரண்டு ரிஷிகளுக்கிடஞ் செய்தது எமக்கங்கீகாரம் இல்லை.

சைவர்:- மநு, விருத்தமனுவென்றும், பராசர், விருத்தபராசர் என்றும் நீவிரேவழங்குவதோடு இந்திரனுக்குப் பௌரோகிதஞ் செய்த துவஷ்டாவென்னும் பிராம்ஹணனொருவனும், மநுமய த்வஷ்டா சில்பிவிசுவகர்மா வென்பவர்களிற் பெறப்பட்ட கம்மாள துவஷ்டா ஒருவனுமாக இரண்டு துவஷ்டாக்கள் உண்டானதற்கும் என்செய்வீர்?

ஸ்மார்த்தர்:- இரெட்டைரெட்டையாய்க் கூறுவது அசங்கதம், ஒவ்வொருவரையே யாம் அங்கீகரியா நிற்பாம்.

சைவர்:- அப்பேருடையவர்களை ஒவ்வொருவராகவே கொண்டக்கால் கம்மாள துவஷ்டாவே தேவகுருவாய் இருந்தானாக ஏற்படும். அப்போது கம்மாளரைப் பிராம்ஹணரல்லவென்னும் வாதம் துர்வாதமாய் முடியும். நீவிருங் கம்மாளரேயாகவரும். இரண்டிரண்டு மஹரிஷிகளாகக் கொண்டக்கால், நீவிர் ஆதி சைவரில் வேறாகி அவரை நோக்கத் தாழ்வு பெற்றுத் துவஷ்டாவென்னுங் கம்மாளன் வம்சத்திற் சேராமல்தப்பிப் பிழைப்பீர். ஆதிசைவரிற்றாழ்ந்து அவரருளைப் பெற்றுவாழ இச்சையா? அல்லது ஆதி சைவரை நிந்தித்து, அதனால் உண்டாகுங்

கம்மாளன் என்னும் பட்டாபிஷேகத்தைப் பெற்று வாழ இச்சையா? இரண்டிலெது சௌகரியம்? தேர்ந்துரைப்பீராக என்று வினவியபோது அந்தஸமார்த்தர் குபிதராய்ப் பதில் சொல்லத் தெரியாமல் வெள்கினர். இப்படிப் பிரஸ்தாபங்கள் வருந்தோறும் விவேகிகள் சமுகத்தில் அவமானமே சந்மானமாக அவரடைய வுண்டாம் ஆகையால் அன்ன விஷயத்தை ஆமிங்கே விஸ்தரிப்பது அவசியமன்றாக இவ்வளவில் விடுத்தாம்.

இதுகாறுங் கூறிவந்த நியாயங்களால் அதீக்ஷிதராகிய ஸ்மார்த்தர் சிவாகமதீக்ஷையைப் பிறர்க்குச் செய்வதற்கு யோக்யரல்லரெனவும், சிவப்பிராம்ஹணரால் சிவதீக்ஷையடைந்து மஹாசைவசித்தி பெற்றவநந்தரமே ஸ்வஜாதியிலும், மற்றைக் கீழ்ஜாதியிலும் ஆசாரியத்வம் வகிக்கவுரியாரெனவும, சைவதீக்ஷையைப் பெறாமலே ஆசாரியத்வம் வகிக்கஆசை யுண்டெனின், ஸ்மார்த்த ஆசாரத்தைத் தாமநுட்டிக்கிறபடியே ஸ்வஜாதியிலுங் கீழ்ச் சாதியிலும் வினியோகப்படுத்திக் கொள்ளலாமெனவும், அப்படிப் பிரவர்த்திக்கும் காலத்தில் அந்த ஸ்மிருதி ஆசாரம் சைவாசாரத்தின் மிக்கதென வீண்வம் பாடுதல் அசப்யமாய் முடியும் எனவும், அந்தப் பிராம்ஹணரைப் போலவே மற்றை மூன்று வர்நத்தாரும் ஸ்வஜாதி கீழ்ச்சாதிகளில் ஆசாரியத்வம் வகிக்க உரியாரெனவும், சூத்திரர்க்கு ஆசாரியத்வமில்லையெனக் கூறுவார்கோள் குற்றமாய் முடியுமெனவும் நாட்டப்பட்டது.

இதனால் **ஆதிசைவரே** பிரதானரும், பிரதமருமாகிய **ஆசாரியர்களாயினரெனவும்,** அவராஜ்ஞாபுரஸ்ஸரமாகவே மஹாசைவராதி மற்றைச்சாதியார் ஆசாரியத்வம் வகித்தனரெனவும், வெளிப்பட்டது.

மஹாசைவரினும் ஆதிசைவரே பிராம்ஹண துல்யராவர் என்பதை **அவ்விருவரும் முறையே பிரமன் முகத்திலும், சிவபெருமான் முகத்தில் உதித்தமையே விளக்கும். தேவர்களில் சிவபெருமான் பிராம்ஹணரும், விஷ்ணுமூர்த்தி க்ஷத்திரியரும், பிரம்ஹதேவர் வைசியருமாவரென வெளிப் படும் வேதமூலங்களேசான்றாம்.**

இந்நூலாரம்பத்தில் சிவபெருமான் பிராம்ஹணரென்று உதகரித்த வாக்கியத்தாலும்,

விஷ்ணுவை க்ஷத்ரியோ ப்ரஹ்மாவை இதி

என்னுஞ் சுருதியாலும்,

ப்ராஹ்மணோ பகவாந் ருத்ர க்ஷத்ரிய விஷ்ணுரிதி

வைஸ்ய பிதாமஹம் சைவ ஸூத்ர பசுஜாயதே ॥

என்னும் புராண வசனத்தாலுமேயவை விளங்கும்.

இதனையே,

"தேவரிற்பிரமன் வசியனாகையிலத் திசைமுகன் முகத்தில் வந்துதித்தோர்
ஆவரோபிரமகுலத்தவராகவன்றருட்சிவபிரான் முகத்தில்
ஏவர்வந்துதித்தோரவர் பிராமணரென்றியம் புதறகுமெனவிசைத்தான்,
சேவலங்கொடியெந் தணிகைநாயகனெஞ் செல்வமாங்கவுணியர்மணியே"

என்றுதணிகாசலஸ்தவம் என்னும் நூலில் யாம் விதந்திருப்பதுங் காண்க.

க்ஷத்திரியராதி பிறரை நோக்க விப்பிரர் பிராம்ஹணராவர் அன்றி ஆதிசைவரை நோக்க அவர்க்குப் பிராம்ஹணத்வம் சித்திக்காதென அறிக. மலமாயாதி ஜடங்களைநோக்க ஆன்மா சித்தாயிருப்பினும் பரசிவனை நோக்கக் கேவலம் ஜடத்தன்மை எய்துதலே மேலுண்மையைக் காட்டும் நிதரிசனமாம். இங்ஙனமாக, சாமானிய விப்பிரர் சைவவேதியரோடு சமானாதிகத்வம் பாராட்டி வருஞ் சாத்ருசமே! சாத்ருசம்!!

அன்றியும், வேறு முக்கியமான அம்சமொன்றை இனி விதந் துரைப்பாம். சாம்பவாக்ரேசாளிட்ட சாபத்தை யடைந்தவருள் ஒருசாராராகிய ஏகாத்மவாதம் பற்றி வாழும் ஸ்மார்த்தரையே யிதுவரை பிரஸ்தாபித்து வந்தோமாகையால் அவர்க்கு ஸ்மார்த்தம், ஏகாத்மவாதம் என்னுந் துவந்தங்கள் உண்டான பரியாலோசனையில் ஸ்மார்த்தம் அங்கீகாரமும், ஏகாத்மவாதம் அநாங்கீகாரமுமாய் முடியும்.

ஸ்மார்த்தம் ஸ்மிருதி அநுட்டானமென்று பெறுகையால் வேதோபப்பிரம்ஹணமாக மஹரிஷிகளால் செய்யப்பட்ட

தன்மையமையும். இது சிவாகமத்தில் விரோதம்பயவாது. அதவா ஏகதேசமுண்டாயிருப்பினும் பாதகமில்லை.

ஶ்ருதிஸ்ம்ருத்யோர் விரோதேது
ஶ்ருதிரேவ ஸ்ம்ருதி

என்னும் படியே ஈண்டும் அமைத்துக் கோடல் பெறுமாகையால்.

பதிவாக்கியமாதல நோக்கியேயன்றோ பசுவாக்கியமாகிய ஸ்மிருதிகளிலும் சுருதி ஆதிக்யம்பெற்றது? அப்படியேயன்றோ பதிவாக்காகிய சிவாகமத்தினுங் கருதற்பாலது?

மேல்வாக்கியத்திற் போந்த சுருதியென்பது வேதசிவாகமம் என்னும் பதிவாக்காகிய பிரமாணசமஷ்டியையே மேலோர் கருதாநிற்பர். ஏகாத்மவாதம் = பதார்த்தத்திரய நிரூபணத்தை யதிக்ரமித்து வேதசிவாகமத்தில் அபார்த்தம்பெற்றுச் சிவாபாரதத் தையே விளைக்கும் உண்மையால் அசாமஞ்சஸமாதல் பெற்றொழியும்.

ஸ்மார்த்தம், ஏகாத்மவாதம் என்பவற்றுண் முன்னையதும் பின்னையதும் ஒன்றிலொன்று முரணுந்தன்மை உண்மையால் இரண்டும் பிரமாணமாதல் எங்ஙனம்? ஸ்மார்த்தமும் சைவமும் அபேதம் ஆதலால் இரண்டும் பிரமாணமாதல் சாலும். ஸ்மார்த்தமும் வைதிகமும் ஒத்தபடி.

இரண்டு சாரங்களும் சிவோபாசனா மார்க்கம் ஆதலால் அவை சாமானிய விசேஷ தர்மங்களாகக் கொள்ளப்படும். இவற்றுள் சைவத்தைத் தழுவாது ஸ்மார்த்தா வலம்பனமாத்திரத்தால் சிவ ஆராதனஞ் செய்பவரே சுத்தஸ்மார்த்தராவர்.

ஸ்மார்த்தா வலம்பனத்தை விவகாரமெனக் கொண்டு சைவத்தையறவே கைவிட்டு ஏகாத்மவாதம்பற்றி வாழ்குனர்தாமும் ஸ்மார்த்தரெனத் திரிகின்றனரேனும் அவர்க்கு அதின் இச்சாபுத்தி உண்மையால் அவர் ஸ்மார்த்தரால் இழுக்காம். இந்த விசாரத்தால் ஸ்மார்த்தத்துக்கே யநதிகாரம் வகித்து அப்பிராம்ஹணராய் திரியும் ஏகாத்மவாதிகள் சைவாசாரியராக முயலும் புதுமையே! புதுமை!!

சைவதீக்ஷாவான்களாய் உள்ள ஆதிசைவரும், மஹாசைவரும் ஸ்மிருதிகளைப் பிரகிருத உபயுக்தமாகக் கிரகித்தலால் "அன்னிய

நூலின் விதியவிரோதமேல், உன்னேல் பழுதென்றுளத்து'' என்றபடியமையும்! அமையும்!! ஆகமிகாளாய் உள்ளபேர் ஸ்மார்த்தத்தை அவ்வளவாக அவலம்பிக்கவேண்டும் என்பது ஆவசிகமன்றாம்.

வேதம் தமக்கு ஸ்வதஸ் ஸித்தப்பிரமாணமாக முன்னரே அவர் பெற்றிருக்கும் உண்மையால். இவ்வுண்மையால், சைவம், வைதிகம், ஸ்மார்த்தம், பௌராணிகம் இத்தியாதிகளைக் கண்டமான சதாசாரங்களாய் ஒன்றிலொன்று சாமான்யவிதிகளாக மேலோர் கொள்ளாநிற்பர்.

ஸ்மார்த்தம் முதலியவற்றைப்போல் சைவம் வைதிகத்தின் உபப்பிரம்ஹணம் ஆகாமல் ஸ்வதப் பிரமாணம் ஆயினமை யாலும், ஸத்யோஜாதாதி கீழ்முகங்களிற் பிறந்தவேதங்களைப் போலாது ஈசானமென்னும் ஊர்த்துவமுக உத்பவம் பெற்றமை யாலும் வேதத்திலும் விசேஷதர்மமாதல் பெற்றமையும் உண்மை சித்தித்தது. சிவாகமத்தில் ஸ்மிருதிவிரோதம் உண்டாகாமையை ''உஜ்வலம்'' என்னும் ஆபஸ்தம்ப சூத்திரபாஷ்யம், ஹரதத்தாசாரிய சுவாமிகள் செய்திருப்பத னானுங் கண்டுணர்க.

இந்தவிசாரத்தால் பிரமாண தாரதம்ய ஸ்வரூபங்களும், அவற்றை மெய்யாகவும், பொய்யாகவும் அநுட்டிக்கும் அதிகாரிகள் தன்மையும், அவர் இவரிவரென்பதும் வெளிப்பட்டமையால், சர்வாதிகாரத்வம் வகித்த ஆதிசைவர் மஹாத்மியம் இனிது பிரகாசத்தை அடைந்தது எனவறிக.

இவ்வுண்மையை விசாரியாத மூடராயுள்ள பேர்சிவாகமம் வேதபாஹ்யமெனக்குழறுவர். உபநிஷத்துக்களின் மத்தியில் அவ்வாகமத்தைப் பாசுபதோபநிஷத் என்னும் ஓர் உபநிஷத்தெழுந்து வெகுவாய்ப் பிரஸ்தாபித்து அதிற்பெறப்படும் பரசிவதத்துவங் களை நவநவமாய் விளக்கியிருக்கும் உண்மை வெளிப்பட்டது. இதனுண்மை (சிவாதிக்யரத்நாவளி 2-வதுபாகம்) யாம் செய்துள்ள வற்றால் இனிது விளங்கும். ஆகவே, பாஞ்சராத்திரம் என்னுமாகமமே வேதபாஹ்யமாதல் திண்ணம். இவ்வாகமம் சோமுகனென்னும் அசுரன் வேதங்களைக் களவு கொண்டொளித்த போது அவனை வஞ்சித்தற்பொருட்டே விஷ்ணுவால் ஐந்து ராத்திரியில் செய்யப்பட்டது. பஞ்சராத்திரத்தில் செய்தமையானே

பாஞ்சராத்திரம் என்பது பெறும். அவ்வசுரன் வேதத்தைக் கிரகித்தோடியபோது அதற்குப் பிரதியாக வேதத்துக்கு முழுவிருத்தமான தர்மாரோபணங்களாற் பாஞ்சராத்திரம் என்னும் நூலியற்றி உலகில் பரவச்செய்து வேதம் இதுவேயாகச் சோமுகன் அறியாமையால் வேதமல்லாததுப்பற்ற நூலொன்றைக் களவாடிச் சென்றானென்று விஷ்ணுபகவான் பிரகடனஞ் செய்கையில் அச்சூழ்ச்சியில் அகப்பட்ட பாபாத்மாக்கள் எல்லாம் தத்தம் வினைக்கேற்ப வேதத்தை இகழ்ந்து பாஞ்சராத்திரம் என்னும் அவைதிக நூலையே வேதமெனக் கொண்டு மருண்டு ததாசார பிரவர்த்தகத்தால் அழிந்தனர். அவர்சந்ததியாரே மேற்படி அவைதிக நூலை யவலம்பித்து இக்காலத்திலும் வேதநிந்தை, சிவசிந்தை முதலியவற்றால் ஜீவனஞ் செய்கின்றனர். இதனால், பரிபாகிகளாவார் அவர் மோசத்தின் மூழ்காது ஜாக்கிரதையோடு ஜீவிக்கவேண்டும் என்பது பெற்றாம்.

இங்கே பாஞ்சராத்திரத்தை விசாரித்தது யாதுக்கெனில், மேல் சாபக் கிரஸ்தராய்ப்ப வித்தொழிந்த பிராம்ஹணரைப்பற்றி விசாரிக்கையில் அவர் ஸ்மார்த்தம், மாத்துவம், பாஞ்சராத்திரம் என்னும் ஆசாரங்களிற் பயில்கின்றனரென்று கூறிமுடித்து அவ்வாசாரங்களில் ஸ்மார்த்தத்தை யுத்தமாசாரமாகப் பிரஸ்தாபித்தோம் ஆகையால் அப்படியே பாஞ்சராத்திரத்தையும் யோசித்து நம்மவர்கெடாது நலப்பாடு எய்தல் கருதியேயாம்.

முன்னர் ஓரிடத்தில் பாஞ்சராத்திரம் வேதத்தில் வெகுவாய் அவிரோதத்தைப் பெறுமென்றது என்னையெனின், பாஞ்சராத்திரமே யன்றி பூணமகம்மது மதங்களும் வேதத்தில் வெகுவாய விரோதமெய்தல் உண்மைகாண்பார்க்கே அது விளங்கும். இவ்ஆபாச மதங்களே தெய்வங்கொள்கை, பாவபுண்ணியங் கோடன் முதலிய சம்பந்தங்களால் வேதத்தில் அவிரோதமாமெனின் பாஞ்சராத்திரத்தை யாம் அங்கீகரித்துரைத்தது எங்ஙனம் பழுதாம்? இவ்வுண்மையால் பாஞ்சராத்திர மயக் கொழிந்தது.

மார்த்துவம் என்பதும்கேவலம் அவைதிகமேயாகிச் சூடுண்டு திரிதன்முதலிய துராசாரங்கண் மேலிட்டுக் காட்டராயணம் மாட்டராயணம் என்னும்பெயர்களால் சில உபநிஷத்துக்கள் உண்டெனன வீண்ஜாலம் பகர்ந்து வெறிகொண்டுரை செய்யும்

ஆதிக்யமே பெறுதலால் அதன் அங்கீகாரம் எம்மட்டில் வைதிகராயுள்ள பேர்க்கு உண்டாயிருக்கலாம் என்பதை யோசித்தால் விளங்கும்.

இப்படி ஒவ்வொன்றும் ஒழிதலால் யாவும் ஒழிந்த காலையில் உடலும் உயிரும் எனத் தெளிந்தோர் தேர்ந்துரைக்கும் பெற்றிமையால் விளங்கும் வேத சிவாகமங்களே சப்பிரமாணமும், சதாசாரிய கிரஹணமும் பெற்று விளங்கும் உண்மையால் அவ்வாசாரிய நிதிகளாகிய சிவவேதியரே சர்வாநுக்ரஹத்வாதி பரமதர்மங்களை உடையராய் விளங்குவர் என்பதுசித்தம்! சித்தம்!! இந்தவுண்மை உணர்ந்தபேர் ஜகத்குருமூர்த்திகளாய் விளங்கும் அவ்வாதி சைவவேதியரையே சிவபெருமானது ஜங்கம வடிவமாகக் கண்டு வழிபட்டு உய்யக்கடவர். சுபம்! சுபம்!!

ஸ்ரீ சம்பந்ததீர்த்த சரணாரவிந்தார்ப்பண மஸ்து.

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

- கந்தபுராணம்

சீதமழை முகில்பொழிக தேசமெலாம்
பயிர்விளைக செல்வம் ஓங்க
மாதர்குழா மக்கள்குழா மனையறங்களுடன்
பொலிந்து மலிந்து வாழ்க
மேதகுசீர்ச் சைவநெறி வேதநெறி
தழைத்தோங்க மேலுமேலும்
பூதலமேற் சிவபெருமான் ஆலயங்கள்
பூசனைகள் பொலிகமாதோ.


- திருக்குற்றாலத் தலபுராணம்.

உ

சூளை. ஸ்ரீசோமசுந்தரநாயகர் இயற்றிய நூல்கள்

1. அசம்பிரதாய நிரசகம்
2. அஞ்ஞான திமிர பாஸ்கரம்
3. அர்ச்சாதீபம் (1885)
4. ஆசாரியப் பிரபாவம்
5. ஆஞ்சநேய ராம வைபவ பங்கம் (1900)
6. ஆதிசைவப் பிரபாவம்
7. ஆபாசஞான நிரோதம் (1880)
8. ஆளுடையபிள்ளையார் வெண்பா அந்தாதி
9. இராமதத்வ தீபிகையினது ஆபாச விளக்கம் (1888)
10. இராமாநுஜ மத சபேடிகை
11. உத்தமவாத தூலவாதூலம்
12. கங்காதாரணப் பிரக்யாம்
13. கீதார்த்த தீபிக ஆபாச நிரசனம் (1897)
14. குதர்க்கவாத விபஞ்சிநி (1880)
15. கூரேசவிஜய பங்கம் (1886)
16. சமரச ஞான தீபம் (1880)
17. சன்மார்க்க போத வெண்பா
18. சித்தாந்த சேகரம் (1892)
19. சித்தாந்த பூஷணம்
20. சித்தாந்த வுந்தியார் (1892)
21. சிவகிரி பதிற்றுப் பத்தந்தாதி
22. சிவதத்வ சிந்தாமணி
23. சிவநாமாவளி
24. சிவபாரம்யப் பிரதரிசிநி (1892)
25. சிவாதிக்ய ரத்நாவளி (முதற்பாகம்) (1873)
26. சிவாதிக்ய ரத்நாவளி (இரண்டாம்பாகம்) (1881)

27. சைவ சூளாமணி (1883)
28. ஞானசதுஷ்டய தர்ப்பணம் (1891)
29. ஞானசம்பந்த பரத்வ நிரூபணம் (1893)
30. ஞானபேதத் துணிவு (1887)
31. ஞானபேதத் தெளிவு (1887)
32. ஞானபேதத் விளக்கம் (1887)
33. ஞானபேதத் விளக்க நியாயரக்ஷாமணி (1893)
34. திருக்குதிரிசிய விவேக கண்டனம்
35. பரதத்வ பிரகாசிகை (1893)
36. பரமபத பங்க வினாவிடை
37. பாரத தாத்பரிய சங்கிரகம்
38. பிரஹ்ம தத்வ நிரூபணம் (1890)
39. பிரஹ்மாநுபூதி (1892)
40. மூர்க்கவாத விபஞ்சிநீ
41. மெய்கண்ட சிவதூஷண நிக்ரஹம் (1900)
42. வேதபாஹ்ய சமாஜ கண்டனம்
43. சித்தாந்த ரத்நாகரம்
44. ஸ்ரீசேக்கிழார் திருவாக்கு உண்மை
45. சுக்லாம்பரதர சுலோக விசாரம்
46. பிரம்ம வித்யா விகற்ப நிராகரணம்
47. தணிகாசல ஸ்தவம்



சஷ்டியப்தபூர்த்தி விழா தம்பதியர்



"ஜோதிஷ ரத்னா ஸ்ரீலலிதாம்பிகைதாசன் சாக்தோபசனா"

சிவஸ்ரீ K.சந்திரசேகர சிவாசாரியார்

ஸ்ரீமதி மகாலெக்ஷ்மி

முடிகொண்டான்

